**ஏடு தொடர்பான அடிப்படைத் தகவல்கள்**

ஏட்டின் வகை : மருத்துவம்

எழுதியவர் : மூத்ததம்பி காத்தமுத்து

ஊர் : கொக்கட்டிச்சோலை

ஆண்டு : 1676

## ஏட்டின் சுருக்கம்

**இவேடானது கொக்கடிச்சோலையைச் சேர்ந்த மூத்ததம்பி காத்தமுத்து என்பவரால் 1676 தை 27 ஆம் திகதி எழுதிமுடிக்கப்பட்டது. இதன் மூலப்பிரதி புதூரைச் சேர்ந்த காலிங்காக்குடி வைகாளி சின்னத்தம்பி என்பவரிடமிருந்து பெறப்பட்டது. இவ்வேட்டில் நாற்பத்தெட்டு நோய்களுக்கான மருத்துவக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. அவை சூரணுருண்டை(காய்ச்சல் வயிற்றுப் பொருமல்) முச்சுரத்திற்கு குடிநீர்(காய்ச்சல்), வாதசுரத்திற்கு குடிநீர், வாதபித்த சுரத்திற்க குடிநீர், சன்னி வாதத்திற்கு குடிநீர், வில்வாதி ஊறல், விகார சன்னிக்கு, அழகிய சொக்கக் குளிகை, காயா சுவாதத்திற்கு குளம்பு, நோவுக்கு பத்து போட, பிறமிசம் எட்டுக்கும் - (சீனி வருத்தம்), தம்பனம், பித்தத்திற்கு சோகைக்கு மருந்து, குடல் வாதத்திற்கு, குடல் வாதத்திற்கு வயிற்றில் வியாதிக்கு, வயிற்றில் வியாதிக்கு, பெரு வயித்துக்கு, சலக்கழிச்சலுக்கு சக்கரை வியாதி சீனி வருத்தித்திற்கு, துவாலை வேப்பகத்தி எண்ணெய், எதிர் எடுப்புக்கு, மகோதரத்துக்கு எண்ணெய், விக்கலுக்கு, சுரத்துக்கு அய்யன் குடிநீர், சன்னிக்கு புகை மருந்து, வேறு சன்னிக்கு புகை மருந்து) ,மாந்தத்திற்கு எண்ணெய், சுரத்துக்கு ஊறல், துவாலை மறிக்க, சன்னி வாத சுரத்துக்கு ஊறல், மூளைக்காய்ச்சலுக்கு (மலேரியா காய்ச்சல்), வேறு பித்தத்துக்கு, கொளுவல் கொத்துக் குளிகை, பெட்கம் எழுப்பிக்குளிகை, வீக்கம் சத்திக்கு குளிகை, பல சுர களிகை, பிறமேகம் வயிற்றுப் புண்ணுக்கு சேர்வை, நெஞ்சு நோவுக்கு,சந்து குத்துனத்துக்கு மருந்து( விசப் பூச்சி குத்தினதுக்கு), பிறமிசத்துக்கு, பெரும்பாட்டுக்கு, வேறு காது கோளாமைக்கு, படர் தாமரைக்கு( தேமல), சன்னிக்கு,சன்னிக்கு துவாலை, காயம் மருந்து, கோளை சளி இறக்க, கோளை குத்துக்கு, கோளை குத்துக்கு மறு மருந்து, முரசழிவுக்கு ((முரசு கரைதல்), கண்ணில் கம்பு தைத்தால், மண்டை சூலை திரிகபால கரப்பனுக்கு, கபால கரப்பன் காதடைப்புக்கு, மூனு முழுக்கு வேறு மருந்து, தலைக்குத்து குடைச்சல் காதடைப்புக்கு, வாதத்திற்கும் பல வியாதிக்கும் பொதுவான எண்ணெய், மலம் சலம் மறிப்புக்கு, கற்பத்தில் பல வாய்வுக்கும், சன்னிக்கு கொதி எண்ணெய், கிரந்தி எண்ணெய் , காதில் வெடி சன்னிக்கு, காதுக்கு சீழ் வடிதல், நாசிப் பிடிப்புக்கு( நாசி வீக்கம்), அஞ்சனக்கலிங்கம், வீக்கத்துக்கு குடிநீர், சிவதை குடிநீர், சுரத்துக்கும் வயிற்றுக் களிச்சலுக்கும், நாலாம் முறை காய்ச்சலுக்கு( மலேரியா), கெற்பளிக்குக் குடிநீர், சுரத்துக்கு குடிநீர், வீக்கம் பலதுக்கும் கோமியக் குடிநீர், மஞ்சள் காமாலைக்கு (மஞ்சள் காய்ச்சலுக்கு), உவாந்தி அருவறுப்புக்கு குடிநீர், நா வறட்சிக்கு, சுரத்திற்கு கருக்கல், வேறு சுரத்திற்கு, உதர வாய்வுக்குக் குடிநீர், காயம் வீக்கத்திற்கு, குடிநீர் அல்சர், வேறு வீக்கத்திற்கு, சிலேட்டுமத்திற்கு ஏனாதி, வேறு சிலேட்டுமத்திற்கு ஏனாதி, இருமலுக்கு, இருமலுக்கு குளம்பு, வேறு இருமலுக்கு குழம்பு, இருமல் மேல் மூச்சு வாதத்திற்கு, இருமலுக்கு, இருமலுக்கு வேறு மருந்து, இருமல் ஈளைக்கு, கோளை இருமலுக்கு, காய**

Copyright @ 2022 Eastern University Sri Lanka

சுவாதத்திற்கு ஏனாதி சூரணம், புளியிலைக் காயம்- கெற்ப வாசு பலதுக்கும், வாய்வுக் கஞ்சி, புளி இலைக்குளம்பு, பிள்ளை உடையார் வாசிக்கஞ்சி, தாளங்காய் எண்ணெய், கிரந்தி எண்ணெய், வாதத் தெண்ணெய், சன்னிக்கு கொதி எண்ணெய், சன்னிக்கு காயம், கெற்ப வாசு வயிற்று வலிக்கு, மாந்தத்துக்கு எண்ணெய், பல வியாதிக்கும் எண்ணெய், கண்டக் கிரந்தி கட்டுக்கு எண்ணெய், பிள்ளை உடையார் கிரந்தி எண்ணெய், சின்ன நாயளன் விதி எண்ணெய், மண்டை சூலை பீனிசத்துக்கு எண்ணெய், பிள்ளை பெற்ற பெண்கள் வயிற்று வலிக்கு, மண்டை தலை பீனிசத்துக்கு எண்ணெய், தூதுவளை நெய், இருமல் காய்ச்சலுக்கு, கிரந்தி எண்ணெய், புளி எண்ணெய், சன்னிவாத சுரத்துக்கு எண்ணெய், ஒரு விதை இழுத்த பல வாசுவுக்கு, சிறு பிள்ளை மாந்தத்திற்கு, வெட்டு மாறன் குளிகை, சேராங் கொட்டை பற்பம், அட்ட சூறணம், வாத சுரத்திற்கு, இரத்த பிடிப்புக்கு, உட்டண வாசுவுக்கு, எரி குன்மத்துக்கு, பல வியாதிக்கும் பற்பம், மாதவிடாய் வராவிட்டால், கோளைக்கு காய்ச்சலுக்கு நெய், மரித்த பிள்ளை விழ மருந்து, மா விழ, சவுக்கார எண்ணெய், சன்னி வாத சுரத்துக்கு எண்ணெய், வேறு காய்ச்சலுக்கு, இரத்தக் கடுப்பு களிச்சலுக்கு, மூல வியாதிக்கு, கரப்பனுக்கு, மாந்தத்திற்கு ஆமை ஓட்டுக் குளிகை, ஏலாதிக் குளிகை, ஏலாதிச் சூரணம், சுரக் குளிகை, அக்கினி மாந்தத்திற்கு, வேறு மாந்தத்திற்கு ஊறல், சிறு பிள்ளை தடுமலுக்கு, களிச்சலுக்கு, அக்கரக் குழம்பு, வயிற்றுக்குத்துச் சூறணம், மாந்த சுரத்தூறல் என்பனவாகும்.

Copyright @ 2022 Eastern University Sri Lanka

**க.1. சூரணுருண்டை (காய்ச்சல் வயிற்றுப் பொருமல்)**

நேர்வாளம் இந்துப்பு சுக்கு கடுக்காய் மிளகு இவை சரிசமன் எடுத்து பொடியாக்கி எலுமிச்சைப் புளியிலரைத்து தூதுளங்காய் அளவு உருண்டைபண்ணி நிழலிலுலர்த்தி ஒரு உருண்டை சுக்குத் தண்ணீரில் கொடுக்கவும்.

**முச்சுரத்துக்கு குடிநீர் (காய்ச்சலுக்கு)**

பங்கம் பாளை பற்படாகம் படரும் சீந்தில் நிலவேம்பு அங்கம் சொறியும் காஞ்சோண்டியும் ஆடாதோடை இலாமிச்சை எங்கும் நிற்கும் பேராமட்டி இருவேலி வட்டு நன்னாரி தங்கும் கோரை சித்தாமட்டி தானே கூடும் பேய்ப்புடலை கூட்டும் வேர்க்கொம்பு கடுகு ரோசனியும் கொள்ளும் திப்பிலி இந்துப்பு கோட்டம் பெரிய கொத்தமல்லி சிறக்கும் வெளுத்தல் பிசின் கடுக்காய் நாட்டில் மிளகு தேவதாரம் நல்லதரு கருஞ்சீரகமுடனே கூட்டிக் குடிக்கத் தீரும் முச்சுரம்.

**உ. 2. வாதசுரத்திற்கு குடிநீர்**

கொத்தமல்லி வேர்க்கொம்பு கொடு வெற்பாரை இருவேலி முத்தக்காசு பற்படாகம் முளைக்கும் சிறு காஞ்சோண்டியின் வேர் மெத்த மணக்கும் இலாமிச்சை வேண்டும் தேவதாரமுடன் மெத்தக் கடுகு ரோசனையில் மோதும் கோட்டமிவை தேடேன். தேடும் இலுப்பைப் பூவுடனே மரமுந்திரிகை ஈச்சுவாடு நெய்தல் தாமரையும் (ஆகாயத் தாமரை) வளரும் பங்கம் பாளையுடன் நீடும் தண்ணீர் நாளிவட்டு நிறையுரியாய் (பதமாக) மிக்க காய்ச்சி நாடும் திப்பிலி தூளப்போட்டு நன்றாய்க் குடிக்கில் வாதசுரம் போகுமே.

**வாதபித்த சுரத்திற்குக் குடிநீர்**

கண்டங்காலி (கண்டங்கத்தரி) சிறுதேக்கு கதிக்கும் கோட்டம் காவரிசி (கார்போக அரிசி) கொள்ளும் மிளகு வேர்க்கொம்பு குதிரைவாலி மரமஞ்சல் சாத்திரவேதி பற்படாகம் திரிபாலை விண்டதொரு கொத்தமல்லி விட்டுனு கிராந்தி இவை கூட்டேன். கீழ்காய் நெல்லியுடன் கொள்ளும் குரும்பை நிலவேம்பு ஏட்டின் படியே இவையெல்லாம் எடுத்தே அஞ்சி களஞ்சியாகப் போட்டே நீர் நாளி விட்டு பொருத்த உரியாய் மிகக் காய்ச்சேன். அதனுடன் கூட்டேன் திப்பிலி இட்டுக் குடிக்கில் வாத பித்த சுரங்களெல்லாம் தணிந்திடுமே.

Copyright @ 2022 Eastern University Sri Lanka

**ய. 3. சன்னி வாதத்திற்கு குடிநீர்**

கடுக்காய் நெல்லி தான்றிக்காய் கமலம் தண்டு (தாமரைத் தண்டு) தேவதாரம் கடுக்காய் முத்தம் வேர் நீச்சை (மணக்கும்) அகிலும் சந்தனம் குரோசாணி பேயும் புடோல் அடுக்கும் பங்கம் பாளையின் வேர் பகரும் வெட்பாலரிசி கொள்ளே. களஞ்சி ஓறொண்டு கொண்டு நறுக்கி இருநாளி (அரை போத்தல் நல்லெண்ணெய்) உண்ணே உளக்காய்ச் காய்ச்சி. மருந்திடுகில் உள்ளே நின்ற சன்னிவாதம் உழல் களிச்சல் ஓங்காளம் ஒரு நாளும் மீளாத சன்னி வாதம் மீளுமே.

**வில்வாதி ஊறல்.**

நெற்பொரியும் சிறு பயறும் வில்லை (வில்வை) முல்லை நேரிய சீர் ஏலமுடன் சுக்கு நெல்லி முற்படமே இளநீரில் இரண்டொண்டாக்கி முற்றிய இளநீரில் கலக்கி வடித்து ஊற்றிக் கொள்ள சொற்பெரிய சத்தி குன்மம் சுரமொடு சத்தி ஆதியாமுடன் கிறுகிறுப்பு உழலை மூச்சு (அஸ்மா) தீரும்.

**விகாரசன்னிக்கு**

சுக்கு மிளகு திப்பிலியும் துய்ய கடுக்காய் இந்துப்பு மிக்க கடுக ரோசனையும் களஞ்சி ஒண்டு. கொண்டு ஒக்க சரி கொள்ளே நேர்வாளம் ஒன்றுபடவே இலுமிச்சம் தக்க பழத்தால் மிளகளவு உருண்டை தரியாதிடுகில் விரோசனமே. (பயன் தரம்) – வெந்நீர் இதற்கு பரிகாரம் மிகுந்து பால்கஞ்சி உண்ணே. –குளிரும்துய்ய வயிற்றில் விசாதி தீரும்.

**ச.4. அழகிய சொக்கக் குளிகை**

கெந்தம் திற்பிலி வெங்காரம் கிளறும் அசமோதகமும் அரத்தைக்கொத்த நேர்வாளம் மடவே (சேரவே) பாகல் சாற்றிலரைத்து உருண்டை செய்து நிரலில் உலர்த்தி இள வெந்நீரில் கொள்ள தொந்தம் (தொந்தரவு) செய்யும் சுரமது உலகை விட்ட தொலையும்.

**காயா சுவாதத்துக்கு குளம்பு**

ஏலம் அதிமதுரம் செங்கோட்டம் தேவதாரம் விலாவரிசி இலவங்கம் பச்சை நாகம்பூ வேர்க்கொம்பு இந்துப்பு சிறுதேக்கு இலாமிச்சை வேர் அமுக்கிறா வேர் கறிப்பாலை வேர் ஓறொன்று களஞ்சி பூசணிக்காய் சாறு ஒருவட்டில் பசுவின் நெய் ஒருவட்டில் பசுவின்பால் வார்த்து அரைத்துக் காய்ச்சி வடித்துக் குடிக்க பல வியாதியும் தீரும்.

Copyright @ 2022 Eastern University Sri Lanka

**5. பிறமியம் எட்டுக்கும் - (சீனி வருத்தம்)**

பால் சொத்தி இலையைப் பறித்து எலுமிச்சங் காயளவு அரைத்து பசுவின் பாலில் குடிக்க எல்லாப் பிறமியமும் தீரும். இது கைகண்டது.

**வயிற்று வலிக்கு**

முருங்கைப்பூவை வண்டுகட்டி அவித்து பிளிஞ்சி பெருங்காயமும் கூட்டிக் குடிக்கவும்.

**நோவுக்குப் பத்துப் போட**

உளுந்து குரக்கன் நெல்லு கரும்புத்து ஒதியம் பிசின் விளாம் பிசின் வேப்பம் பிசின் மான் கொம்பு இதுவெல்லாம் தீய வறுத்து பொடி செய்து மத்துப்புல்லு சாகம் விட்டரைத்து அதன்பிறகு கோழி முட்டைக்கரு வார்த்தரைத்துப் பத்துப் போடவும்.

**6. தம்பனம்**

பாவட்டை வடக்கே போன வேர் பிடுங்கி கன்னி நூலால் காப்புக்கட்டி மறுகிழமை பிடுங்கி ஆறுமணிநேரம் அரையில்கட்ட தம்பனம்.

**பித்தத்திக்குஇ சோகைக்கு மருந்து**

தேற்றாங்காயைக் கொண்டுவந்து இடித்து இப்படி மூன்றுநாள் நான்கு நாள் காயவைத்து இப்படி பற்பமாக்கி காஞ்ச தண்ணீரிலே கலக்கிக் குடிக்கச் சத்தி எடுக்கும் வயிறு விடும். மாற்றுக் குளுந்த தண்ணீர் உப்பு புளிப்பு தவிர்க்கவும். பத்தியம் பிடிக்கவும். விடாத சுரமும் விடும்.

**குடல் வாதத்திற்கு**

உத்தமாகாளிச் சாறுளக்கு பசு நெய் உளக்கு கொதிப்பித்து பத்துநாள் நாவால் நக்க மாறும்.

வேறு: - இலுப்பைப் புண்ணாக்கு சுட்டு உளக்கு பசும்பாலில் குடிக்க மாறும்.

**குடல் வாதத்திற்குஇ வயிற்றில் வியாதிக்கு**

சீலையை (மனோசிலை) சுட்டுக் கருப்புக்கட்டியில் குழைத்து நல்லெண்ணையில் தின்ன மாறும்.

வெள்ளைக்காக்கணம், சமூலம் துவைத்து உரிச்சாறு (பிளிந்த சாறு) வேப்பெண்ணை கூட்டிக் குடிக்க மாறும்.

Copyright @ 2022 Eastern University Sri Lanka

நொச்சிக்கொழுந்து களல் (காரை) கொழுந்து உவர் சாறனை வேர் இவை அரைத்து நல்லெண்ணெயில் குழைத்து விழுங்க மாறும்.

**வயிற்றில் வியாதிக்கு**

சாறனைச்சமூலம் அதிமதுரம் கூட்டி அரைத்து இள வெந்நீரில் கொள்ள வயிற்றில் வியாதிமாறும்.

7. **பெரு வயித்துக்கு**

மருதம்பட்டை பொடி நாளி அளிஞ்சில் பட்டைப்பொடி நாளி கராம்பு கார்போக அரிசி ஒருபொடி மிளகொருபிடி சுக்கொருபிடி மஞ்சளொரு பிடி சிவதை வேர் ஒருபிடி நத்தைச்சூரிச்சாறு மூன்று நாளி இந்தச் சாற்றில் மருந்துகளையிட்டு –ஏழு நாள் வெயிலில் வைத்து நன்றாய் உலர்ந்த பின் எடுத்து பொடி செய்து ஒரு வெருகடிப் பிரமானம் தின்ன பெருவயிறுமாறும்.

**சலக்கழிச்சலுக்கு - சக்கரை வியாதி- சீனி வருத்தம்**

ஆவிரம் வேர் (பொன்னாவாரை) அதன் பட்டை மலை தாங்கி வேர் அத்திப்பட்டை மருதம் பட்டை கருவேலன் பட்டை ஓரொன்று ஆறுபலம் (சரிசமன்) கடுகு நெல்லி தான்றிவிரை ஓரொண்டு முப்பலம் (சரிசமன்) கூட்டி நாவல்பட்டை மஞ்சள் இதுவும் கூட்டி ஊறப்போட்டு காலொன்றாய்க் காச்சிக் குடிக்கவும் வியாதி ஆறும். கைகண்டது.

மலைதாங்கி என்பது முசுட்டை கொடிபோல் இருக்கும். கிள்ளினால் பால் வராது).

**துவாலைமறிக்க வேப்பகத்தி எண்ணெய்**

உள்ளி பலம் - உ (2)இ சாறனை வேர் பலம் - க (1) தயிர் வேளை வேர் பலம் க (1) கள்ளிப்பால் முக்களஞ்சு சித்தாமணக்கம் எண்ணெய் நாளி சேர்த்துக் காய்ச்சி உண்ண மாறும். பத்தியம். வெந்நீர் பரிமாறவும்.

அவித்த சாதத்தில் இடுகுளிகையொண்டு கொடுத்தால் வகுத்து வலிக்கு திண்டு விடும். அமிர்த வல்லி (சீந்திக்கொடி) தன்னில் கொள்ளத் திறமாக வகுத்து வலி தெறித்தேயோடும். நெஞ்சடைத்தல் நோவுக்கொல்லாம் வெற்றிலையில் விட்டிடு உலகில் வாய்வு நீங்கும். தலைகுத்துப் பேய்மயக்கு பொருந்தி வருபித்தச்சன்னி சகலதுக்கும் வாகுபெறு தும்பைச் சாகத்தில் நாசிவழியாகிவிடு வாதநோக்கும் தாகமுறு காய்ச்சலும் பொருமலுக்கும் கருவேம்பின் பட்டையுடன் காயத்திலிட்டால் ஆமணக்கம் எண்ணெய் கூட்டிப் பருகினால் வாய்முடக்கியதோர் சன்னிக்கு கொள்ளப்பா குக்குடத்தில் (கோழி

Copyright @ 2022 Eastern University Sri Lanka

இரத்தம்) இரத்தம் தன்னைக் கூட்ட கொடிதான மந்தம் தனக்குச் தாள் வில்லாத தேனுடனேபாகு காய்ச்சி தயவுடனே கொடுத்திட்டால் மந்தம்மாறும். வாளவளியிலா இடர் காணும் சன்னிக்கு நறுநெய்யில் விட்டால் நாள் விட்டு வந்த சுரந்தனக்கு நீயும் நயமுன்னி சங்கு கசாயத்திலிட்டே காட்டுவாய் மூன்று நாளே.

வந்த காய்ச்சலுக்கு இதமுடனே காதில் காட்டத் தீரும். போட்டிடும் வாசி அடச் சன்னிக்கும் பெரும்புகழான திப்பிலியோடுள்ளி கூட்டி நாட்டமுறு மிளகுடனே கசாயம் வைத்து நயமாக இட்டிடு சன்னி தீரும். நாட்டமுறு சலத்துத் சன்னி (சீனி வருத்தம்) பேய்க்கரும்பு சாறுடனே கொடு வேர்த்து வரும் சன்னிதானொடு சன்னி அனைத்தும் போகும். விரைவுடனே அமர்த்தியதோர் சன்னி சொல்வேன். தேய்த்துவிடு உமிழ்நீரில் அஞ்சலத்தை தெளிவாகும். காதுவலி தீரவேண்டி மாத்தியதோர் நல்லெண்ணெய் வெள்ளுள்ளி சாகம் (சாறு) காதிலிட வலியும் போமே- போய்விடுங்காண் துளசிவேர்க்கசாயத்திலிட்டால் போகாத சன்னி எல்லாம் போகுமெண்டு சொன்னாரே- பாகமாய் வந்த வாதசுரத்திற்கு பரிவான நல்லெண்ணெய் பரிந்தெடு தேடிவருவாய் மேனியுடன் (குப்பைமேனி) வேருங்கூட்டி சிறப்பாக இட்டிடுவாய் சன்னி தீரும். நாட்பட்டு உரத்த காய்ச்சலுக்கு நன்றாக துளசி வேர் கசாயத்தில் இட்டால் ஓடிவிடும். தாமாக வந்த காய்ச்சல் யுத்த கண்டமாலை மாறும் அனுமானங்கேள் வாடாத வட்டு வேர்ச் சாறும் நலமான நல்லெண்ணெய் தன்னில் வாரென வாத்திடு வாகடப் பத்தில் சொல்லப்பட்ட வெட்டி (வெட்டி வேர்) வடிவான சகாயத்தில் இட்டாயானால் ஓடுமே சன்னி தானே.

காணாறு வேம்பெண்ணெய் தண்ணீரிலிட்டால் கடிகடிதாய் ஓடிப்போகும் காணுங்காணேன். காணவே வயிறுவிடும் முருங்கப்பட்டை கருதியதோர் வேம்பின் வேர்க் கசாயம் கூட்டி பேணியதோர் குளிகை யொண்டு விடுவீராகில் பேதமுறு வயிறு விட்டு பெரியோர் சொன்னார் மாரணமென வந்த சன்னியெல்லாம் தீருமாம். (சீனி வருத்தம்)

## எதிர் எடுப்புக்கு

சித்தாமணக்கின் வேர் பிடுங்கி தோல் சீவி அரைத்து ஒரு பாக்களவு தித்திப்பு கறுப்புகட்டியுடன் (பனங்கட்டி) கூட்டி இளவெந்நீரில் கொடுக்கவும். இதற்கு மாற்று நாவல் துளிர் ஒரு பாக்களவு அரைத்துக் கொடுக்க மாறும்.

Copyright @ 2022 Eastern University Sri Lanka

**8. வேறு:- மகோதரத்துக்கு எண்ணெய்**

அகில் வசுவாசி கச்சோலம் பச்சிலை நாகம்பூ ஏலம் இலவங்கம் மாஞ்சில் அதிமதுரம் தேவதாரம் பற்பாடகம் சிங்கி மாஞ்சில் கோட்டம் இந்துப்பு வெறும் குரும்பை சதகுப்பை செவ்வரளி கடல் நுரை கடுகுறோசனை இவை ஓரொண்டு களஞ்சி பொன் மெழுகு இனி வேர் வகை சித்தாமட்டி வேர் பேராமட்டி வேர் முத்தக் காசு நன்னாரி வேர் பொன்னாவரை இளநீர் நாளி பசும் பால் நாளி மோர் நாளி இருவேலி இலாமிச்சை தாமரை வளையம் சீதேவியார் செங்களுநீர் இவை ஓரொன்று நாளிச்சாறு விடவும். மெழுகுபதத்தில் வடித்துப் எடுக்கவும். நல்லெண்ணையில் காய்ச்சவும்.

**விக்கலுக்கு**

மனோசிலை திப்பிலி மிளகு விளாம்புளி நெற்பொறி ஏலம் அதிமதுரம் ஒரு நிறைக்கொண்டு பொடி செய்து கருப்பட்டி கூட்டித் தின்ன விக்கல் மாறும்.

**சுரத்துக்கு அய்யன் குடிநீர்**

திருக்கொண்டை பட்டை வேர் கற்றாளம் சருகும் பெருபி (பிரமி இந்துப்பு களிப்பாக்கு தேற்றாங்கொட்டை வேர்க்கொம்பு கடுகு ரோசனை கடுக்காய் இரு களஞ்சி கூட்டி நாலொண்டாய் காய்ச்சிக் குடிக்கும்போது கடுகு ரோசனை பொட்டணி கட்டிப்போட்டு பின்பு எடுத்து குடிநீரில் கலக்கி குடிக்கவும்.

**9. வேறு சன்னிக்கு புகை மருந்து**

பெருங்காயம் அபின் மஞ்சள் அசமோதகம் திற்பிலி உள்ளி வசம்பு வேர்க்கொம்பு முசுத்து முட்டை பன்றிக்கொம்பு சந்நி நாயகன் இவைகள் கூட்டி இலைச்சாகம் உத்தமா காளிச்சாறு குப்பைமேனி தயிர்வளை சந்நி நாயகன் இது கூட்டிச் சீலையில் வைத்து நிழலில் உலர்த்திபின் கடைச்சரக்குகளைச் சீலையில் வைத்து திரியாய் திரித்து மைபீலியை (மயில் இறகு) வேப்பெண்ணெயில் துவைத்து அதுக்குள் வைத்துப் புகையிடவும் சன்னி ஒடுங்கும்.

**வேறு** –

**மாந்தத்துக்கு எண்ணெய்**

பொடுதலை முருக்கிலை நொச்சியிலை சூரையிலை வேலிப்பருத்தி இலை அயமதாகம் வசம்பு சுக்குமிளகு வெங்காயம் கூட்டி அரைத்து நல்லெண்ணெயில் காய்ச்சிக் கொடுக்கவும்.

Copyright @ 2022 Eastern University Sri Lanka

**சுரத்துக்கு ஊறல்**

பங்கம் பாளை வேர் வேர்க்கொம்பு பாகாக முத்தக்காசுடனே அங்கம் சொறியும் அகில் வேரும் அடையவே காய்ச்சிக் குடித்திடுகில் அங்கமெல்லாம் செறிந்திருக்கும் சுர சூலை பொல்லாத நோய்கள் இவை மீளும்.

10. **(ய) துவாலை மறிக்க**

வட்டத்துத்தி இலை ஒருபிடி புழுங்கல் அரிசியுடனே விழுதுபட அரைத்து சிறுக மூன்று உறட்டி பண்ணி மண்ணோட்டில் சுட்டு நல்லெண்ணெயில் தோய்த்துத் (நனைத்து) தின்னவும்.

**வேறு**

மிளகு நற்சீரகம் கருஞ்சீரகம் வசம்பு எருக்கிலைச்சாறு கொடி வேலி ஓரொண்டு களஞ்சி நல்லெண்ணெய் ஆமணக்கெண்ணெய் எடுத்து கொதிப்பித்து உண்ணவும் மாறும்.

**சன்னி வாத சுரத்துக் ஊறல்**

சித்தாமட்டி சோர்வில்லா முத்தக்காசு சிறு காஞ்சோன்றி நன்னாரி சீந்தில் முன்னமே கூறின வேர்க்கொம்பு பேராமட்டியொடு கடுகு ரோசனை கொள்ளே- கொள்ளு நீர் தேவதாரம் கொத்தமல்லி மெள்ளவே இரு களஞ்சு விருப்புடன் இவை தான் கொண்டு அள்ளு நீர் நாளி விட்டு அமையவே உரியால் காய்ச்சி துள்ளு தேன் திற்பிலி தேன் விட்டு துலங்கவே குடித்திடாயே.

**வேறு**

11. **(யக) மூளைக்காய்ச்சலுக்கு (மலேரியா காய்ச்சல்)**

முசுற்று முட்டையை சீலையில் ஊட்டி (பொதிந்து) பசும்பாலில் நசியம் விட மூளைக்காய்ச்சல் மாறும்.

**வேறு பித்தத்திற்கு**

பன்னிரு களஞ்சி காஞ்சோன்றிவேர் இரு தூளி நீர் விட்டு உளக்காக காய்ச்சிக்குடிக்க பித்தம் சபிக்கும்.

**வேறு** –

ஆடாதோடைச் சமூலம் காச்சித் தேறு சாம்பிராணியும் (பால் சாம்பிராணி) கூட்டிக்குடிக்க நீண்ட நாள் கொண்ட பித்தம் தீரும்.

**வேறு** –

தாமரைக்கிழங்கும் அறக்கீரையும் கடுக்காயும் இவை தனித்தனி ஊறவைத்து குடிக்க பித்தம் முறியும்.

Copyright @ 2022 Eastern University Sri Lanka

**கொளுவல் குத்துக் குளிகை**

பெருங்காயம் களஞ்சி -ச- (7) அரிதாரம் களஞ்சி - ச- (7) வாளம் களஞ்சி –உ- (2) கையான் தகரை சாற்றிலரைத்து மிளகளவு உருண்டை திரட்டி சிலேட்டும சன்னிக்கு ஆடாதோடை வேர் காஞ்சோன்றி வேர் கசாயத்திலிடவும் உட்குத்துக்கு சுக்கு உள்ளி மிளகுகசாயம் நல்லெண்ணை கூட்டி இடவும். முடக்கு சன்னிக்கு ஆமணக்கெண்ணையில் கொடுக்கவும். கொளுவலுக்கு நொச்சியிலை அவித்த சாற்றில் இடவும். வயிற்றுவலிக்கு வெற்றிலையில் இடவும். நெஞ்சு நோவுக்கும் வெற்றிலையில் இடவும். தலைகுத்துக்கும் பிய்க்கும் பித்த சன்னிக்கும் கபால குத்துக்கும் தும்பை சாற்றில் நய்யம் பண்ணவும். காய்ச்சலுக்கு சுக்கு பொருமலுக்கு வேப்பம் பட்டை கசாயமும் ஆமணக்கெண்ணை கூட்டி இடவும். உள்போக சன்னிக்கு மாதுளம் பழச்சாற்றில் இடவும் ஒன்னைவிட்ட காய்ச்சலுக்கு (மலேரியா காய்ச்சல்) இசங்கம் வேர் கசாயத்தில் இடவும். மூளை உள் காய்ச்சலுக்கு (மலேரியா) கையில் கட்டவும் வாய்வு சன்னிக்கு உள்ளி மிளகு திப்பிலி கசாயத்திலிடவும். அயதி சன்னிக்கு பேய்க்கரும்பு சாறும் குப்பை மேனி வேர் கசாயம் உரத்த காய்ச்சலுக்கு சதுளா (தூதுவளை) வேர்க்கசாயம் - கண்டமாலைக்கு (தொண்டைக்கழலைக்கு) வட்டு வேர் கசாயமும் நல்லெண்ணெய் உப்பு இடவும். வாத சன்னிக்கு பனமட்டை கசாயம் (18) சன்னிக்கு வேப்பெண்ணெய் அசதி சன்னிக்குத்து பலஞ்சனம் (தீரும்) காதுவலிக்கு தயிர்விளாச்சாகம் நல்லெண்ணெய் மாற்று- இராக்காச்சலுக்கு துளசி வேர்க்கசாயம் உதயகாச்சலுக்கு நல்லெண்ணெய்யில் கொடுக்கவும். பித்தக்காச்சலுக்கு தித்திமுளை பச்ச இஞ்சி கசாயம் (தித்திமூளை) முளையுடன் கூடிய சிலேட்டும சன்னிக்கு குப்பமேனி வேர் கசாயம் தொய்வுச்சன்னிக்கு (ஆஸ்மா) முசுத்து முட்டை பிடமிட்டு சுடுதண்ணீரில் அரைத்திடவும். சுடுசாம்பலில் அவித்து நிறப்பாடு (பெரும்பாடு) கொப்பாட்டுக்கு இடவும் வயிறுவிட முருங்கைப்பட்டை வேப்பம் வேர்கசாயம் 18 சன்னிக்கு முருங்கைவேர் காண்டைவேர் குதிரை வாலிவேர் உள்ளிநிலவேர் முசுத்து முட்டை திப்பிலி காயம் வெளுத்தல் பிசின் வேப்பெண்ணெய் தயிலம் வடித்திடவும்.

**12. பெட்கம் எழுப்பிக்குளிகை**

தூதுளை ஆடாதோடை மாவிலங்கை நொச்சி உலர் காட்டுக்காண்டை சிவனார் வேம்பு நாயுருவி அரமுளி சாறனை வேலிப்பருத்தி குதிரை வாலி இவை வேர் உள்ளி சுக்கு அரத்தை அகில் பூத்தாம்பளம் பூனாகம் கோளிக்காரம் திப்பிலி வெளுத்தல்

Copyright @ 2022 Eastern University Sri Lanka

பிசின் கடுகு வாலுளுவை வசம்பு சதகுப்பை இவை சமன் கஞ்சா சாறு விட்டரைத்து பாக்களவு உண்டை செய்து உலர்த்தி சிறங்கை வேப்பெண்ணெய் கொதிக்க வைத்து உள்ளுக்கும் கொடுத்து தானங்களிலும் பூசவும். நசியம் விட்டு சிரசிலும் பொருத்தவும். உண்டையில் பாதி நினைவு அயர்ந்தால் புகைக்கவும்.

**வீக்கம் சத்திக்கு குளிகை**

அழிஞ்சில் வேர் நார்க்கரந்தை வேர் அவுரி வேர் பெருங்காயம் சமன்கொண்டு ஆட்டுக்கோமியத்தில் அரைத்து இலந்தைக்காயளவு உலர்த்தி இளவெந்நீரில் கொடுக்கவும். எல்லா வீக்கமும் மாறும்.

**பலசுர குளிகை**

சுக்கு நெல்லி தான்றி கடுக்காய் வெண்காரம் களஞ்சி (1) மிளகு திப்பிலி பெருஞ்சீரகம் சாதிலிங்கம் பச்சை இஞ்சி கொடிவேலி வேர் கெந்தகம் வசம்பு சரக்கு நிறை களஞ்சி க (1) ஆமணக்க முத்து வாளம் களஞ்சி பச்சைத்தேனிலரைத்து பிறகு எலுமிச்சம் புளி விட்டரைத்து பயறளவு உருண்டை செய்து உலர்த்தி தினக்காய்ச்சல் குலைப்பன் மயிற்குற்றெறிஞ்சக்காச்சல் (தினுக்கிட்டு பயர்ந்தபோது வரும் காச்சல்) லுக்கு நொச்சியிலைச்சாற்றில் கொடுக்கவும். முறை வெதுப்புக்கு தயிர்வேளைச்சாற்றில் கொடுக்கவும். இரண்டுக்கும் மாற்று புளி இலைச்சாறு கூதல் கொண்ட காய்ச்சலுக்கும் வயிறு சுடும் காய்ச்சலுக்கும் வட்டுக்காய் சாற்றில் கொடுக்கவும். உதறலுடன் வாற காய்ச்சலுக்கு தோடம் புளியில் கொடுக்கவும். சத்திகொண்ட காய்ச்சலுக்கு சுக்கு நீரில் கொடுக்கவும். நீலபித்த சுரத்திற்கு தம்பலகுருமிச்சம் சாற்றிலிடவும். பித்த சிலேட்டுமக்காய்ச்சலுக்கு கையான் தகரை சாறுபிளிந்து கொடுக்கவும். சன்னிக்கும் பலவித காய்ச்சலுக்கும் சுக்கு நீரிலிடவும். தலைசுற்றி வயிற்றுப்போக்குக்கு முருங்கை இலைச்சாற்றில் இடவும்.

**பிறமேகம் வயிற்றுப்புண்ணுக்கு சேர்வை**

சாதிக்காய் கராம்பு வசிவாசு அயமதாகம் கஞ்சா இவை ஒரொன்று களஞ்சி க (1) அபின் களஞ்சு – கால்- தோல் போக்கின எள்ளு – கொத்து. க (1) உறுண்ட பனங்கட்டி பலம் உ (2) எள்ளும் பனங்கட்டியும் சேர்த்து சரக்கயும் பொடி செய்து மேலே தூவி சேர்த்து திண்ணவும் சமையமட்டும் அந்திக்கும் காலமேயும் கொட்டைப்பாக்களவு திண்டு வெந்நீர் குடிக்கவும்.

Copyright @ 2022 Eastern University Sri Lanka

13. **நெஞ்சு நோவுக்கு**

குமுளம் பட்டையை அவித்த தண்ணீரில் வெள்ளுள்ளி கடுகு பெருங்காயம் வசம்பு சாணிப்பாகக் காய்ச்சி நெஞ்சிற் போடவும். உள்ளுக்கு கொடுக்க மருந்து செவ்விளநீரைத் துவைத்து அவித்துப் புளிந்து கருங்குறவை (கறுங்கறுப்பன் நெல்) நெல்லரிசி மாவில களிக்கல் நல்லெண்ணையில் தின்னவும்.

**சந்து குத்தினதுக்கு மருந்து (விசப் பூச்சி)**

அவுரி வேர் காவிளா வேர் மிளகு மஞ்சள் வசம்பு உள்ளி இவை பொடி செய்து வேப்பெண்ணெய்தெளித்துக் காய வைத்து வெற்றிலை வெடித்த பதத்தில் இறக்கி தூளைப்போட்டு ஆற்றிக் குத்தின இடத்தில் போடவும். பத்தியம். கைப்பு புளிப்பு இனிப்பு தவிர்க்கவும்.

**பிறமிசத்துக்கு**

வெள்ளைக் குந்திரிக்கம் பொடி செய்து வெருகடிப் பிரமாணம் மூன்று கோழிமுட்டை வெள்ளைக் கருவில் மூன்று நாள் மூன்று நேரம் குடித்து உப்பு புளியும் தவிர்க்கவும். பச்சைத் தண்ணீர் முழுகவும்.

14. **பிடிப்புக்கு குத்துக்குளிகை.**

பிடிப்புக்கு செப்பு நெருஞ்சில் மூலத்துடனே பிடுங்கித் துவைத்துப் பசுப்பால் அல்லது இளநீரில் குடிக்கவும். உப்பு புளி தவிர்க்கவும். குளிர்ந்த தண்ணீர் முழுகவும்.

**வேறு-**

சுக்கு உள்ளி கடுக்காய் திப்பிலி பேரரத்தை கற்பூரம் இந்துப்பு கராம்பு வசுவாசி கருஞ்சீரகம் மிளகு வால்மிளகு கார்போக அரிசி அமுக்கிறா கடுகு உத்தமாகாளிச்சாறு விட்டரைத்து இலந்தைக் காயளவு உருண்டை செய்து நிழலிலுலர்த்தி உள்ளுக்கு ஒரு உருண்டை வெந்நீரில் குடிக்கவும். குத்துகிற இடத்தில் அதே சாற்றில் பாகுகாய்ச்சிப் பூசவும். குளிகை ஒன்று தூளாக்கிப் போடவும். வெந்நீர் பரிமாறவும். கயரோகக் காரருக்கு காயச் சட்டியில் கட்டியுப்பு வறுத்தெடுத்துப் போட்டு அந்தச் சட்டியில் ஓமம் வறுத்து செவ்விளநீர் - க (01) கொத்துவிட்டு சரியாகக் காய்ச்சி அந்தி சந்தி ஏழு நேரம் குடிக்கவும். உப்பு வறுத்துக் கட்டவும். புளி தவிர்க்கவும். முகிலி இலை தண்ணீர் வார்க்கவும்.

Copyright @ 2022 Eastern University Sri Lanka

**யரு**-15

**பெரும்பாட்டுக்கு**

ஆவாரம் வேர்ப்பட்டை இந்துப்பும் கூட்டி எருமைமோரில் கொடுக்கவும். பெரும்பாடு தீரும்.

**வேறு காதுகேளாமைக்கு**

பூமத்தங்காய் முகிழ் திறந்து உள்சோத்தியை எடுத்து அடுப்பிலே வேகவைத்து அப்படியே எடுத்துப் பிளிந்து காதில் விட்டடைக்கவும். காதுகேளாமை மாறும்.

**படர் தாமரைக்கு (தேமல்)**

நல்லலெண்ணெய் உளக்கு அதிமதிரம் (வெள்ளைக் குன்றுமணி வேர்) ஒரு சிறங்கை சீரகம்இ களஞ்சி அ (8). மிளகு காற்களஞ்சி இவை பிடமிட்டு இடித்து எண்ணெயில் போட்டு ஒவ்வொரு சிப்பிளவு குடிக்கவும். அரைக்கொத்தெண்ணெய்க்கு மதுரம் களஞ்சி (உ) 2 சீரகம் களஞ்சி க (1) மிளகு (16) தேசிப்புளி பூசணிக்காய் சுரைக்காய் வினாகிரி கஞ்சி இடவும். மிளகு நீரும் சோறும் சாப்பிடவும். கைகால் பிடிப்பு மூலாக்கினியால் வருகின்ற விசாதி எல்லாம் தீரும்.

**சன்னிக்கு**

நாய்க்கடுகு வேலிப்பருத்தி முடிதும்பை எருக்கிலை தயிர்வேளை இவை சமூலம் (வேர் காய் பூ தண்டு) மாவிலங்கப்பட்டை முருக்கங்கப்பட்டை உள்ளி வசம்பு சுக்கு திப்பிலி மிளகு சரிசமன் கொண்டிடித்து வண்டு கட்டி அவித்து சரிவரமட்டும் ஆவிபிடிக்க சன்னி இறங்கும். கைகண்டது.

**சன்னிக்கு துவாலை**

பருத்திக் கொட்டையில் மட்டுமட்டாய் தண்ணீர் புகட்டி துவைத்து அந்தத் தண்ணீரில் இரண்டுபிடி பூனைக்களச்சி கொழுந்து ஒரு சிறங்கை கடுகு தண்ணீர் விட்டரைத்து குளம்பாக்கி பச்சையாக வேது துவாலை போடவும். சுகங்காணும். அல்லது நித்திரை வருவதற்கும் நல்லது.

**யசா (16) காயம் மருந்து**

முருங்கைமுத்து ஆமணக்கம் முத்து பச்சை விதை (14) சீனக்காரம் நேர்வாளம் கஉ (12) எருக்கலம் பாலில் அரைத்துப் போடவும்.

Copyright @ 2022 Eastern University Sri Lanka

**கோளை சளி இறக்க**

கையான் தகரை தூதுவளைப்பழம் கறுத்தக் கரும்பு அல்லது கற்கண்டு சீனி இளநீர் ஆவின்பால் நெய்க்கொட்டை ஏலம் சாதிக்காய் இந்துப்பு அத்தி திப்பிலி சந்தணம் சரிசமன் எடைகொண்டு இடித்து பொடி பண்ணி பாகுகாய்ச்சிக் கொடுக்கவும்.

**கோளைக்குத்துக்கு**

நெல்லி தான்றிக்காய் கடுக்காய் இருசீரகம் ஓமம் இந்துப்பு அதிமதிரம் அமுக்கிறா தூதுவளை வேர் காய் பழம் நன்னாரிவேர் வட்டுவேர் தேத்தாம்பழம் உள்ளி திப்பிலி பிடமிட்டுத் தேன் நறுநெய்யில் குளப்பி இரண்டு நேரம் வெருகடி கொடுக்கவும்.

**கோளைக் குத்துக்கு மறுமருந்து**

நற்சீரகம் ஏலம் இலவங்கம் திப்பிலி இலாமிச்சை மிளகு ஓரொண்டு களஞ்சி –நு-03 சீனி இறாத்தல் கற்கண்டு இறாத்தல் பால் அரைத்து ஆவின் நெய் கால்கொத்து நீற்றுப் பூசனிக்காய் க (1) வெட்டிக் காயவைத்து பொரித்துத் தூள் செய்து மருந்து பிடமிட்டு குளம்பாக்கித் தின்னவும்.

**முரசழிவுக்கு (முரசு கரைதல்)**

ஆலங்கொழுந்து வேர்ப்பட்டை எருக்கலவேர்ப் பட்டை மருதம் பட்டை கருங்காலி மருக்காரை எட்டொன்றாக்கி (எட்டு மடங்கு) தண்ணீரில் போட்டு ஒரு மடங்காககக் காய்ச்சி கொப்பளிக்கவும்.

**வேறு**

**கண்ணில் கம்பு தைத்தால்**

துவரந்துளிர் நாவல் துளிர் குறிஞ்சா இலை மிளகு 03 நசியத் தட்டி முலைப்பாலில் ஊட்டி கண்ணில் புளியவும்.

**யஎ (17)**

**மண்டை சூலை திரிகபால கரப்பனுக்கு**

இதரம் அரிதாரம் காந்தம் கெந்தகம் மனேசிலை ஒருநிறை கொண்டு மதுமத்தை வேலிப்பருத்தி நொச்சி இலை ஒவ்வொரு சாறு சீலையில் உருட்டி காயவைத்து இந்தச் சாற்றில் மருந்தரைத்து திரி செய்து நாசியில் புகைக்க பீனிசம் மண்டை சூலை நாசி அடைப்பு மண்டையில் பாரம் மண்டை நோய் சகலதும் தீரும்.

Copyright @ 2022 Eastern University Sri Lanka

**கபால கரப்பன் காதடைப்புக்கு**

மிளகு உ (2) கொத்து உ (2) கொத்துத் தண்ணீர் ஒன்றாய்க் காய்ச்சி மொசு மொசுக்கை சாறு கொத்து க (1) குளம்பாகக் காய்ச்சி தைலம் தப்பி மூன்று நாளைக்கு ஒருக்கால் மூன்று முழுக்கு முழுகவும். வெந்நீர்இ தண்ணீரால் களற்றவும்.

**மூணுமுழுக்கு வேறு மருந்து**

வசம்பு கொத்தமல்லி மிளகு கருஞ்சீரகம் கோமியத்தில் அரைத்து மூன்று முழுக்கு முழுகவும்.

**தலை குத்து குடைச்சல் காதடைப்புக்கு மருந்து**

ஆவின் கோமியம் ஒருநாளி மிளகு கொத்து (உ2) இரண்டு கொத்து தண்ணீர் சேர்த்து ஒன்றாகக் காய்ச்சி பசுப்பால் கொத்து நறுநெய் கொத்து சேர்த்துக் காய்ச்சி பதத்தில் வடித்து தலையில் வைக்க குத்துக் குடைச்சல் மற்றும் கரப்பன் இவை தீரும். காதடைச்சல் மாறும்.

**வேறு**

வெள்ளைக் காக்கணம் வேர் காண்டை வேர் ஒவ்வொரு பிடி உள்ளி மிளகு சுக்குக் கடுக்காய் இவை அரைத்து நாலொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்கவும்.

**யஅ (18)**

**வாதத்திற்கும் பல வியாதிக்கும் பொதுவான எண்ணெய்**

நொச்சி மாவிலங்கை நீர்முள்ளி பொன்னாங்கண்னி தயிர்வேளை பருத்தி ஆமணக்கு கான்டை காத்தொட்டி கொடிவேலி வாதமடக்கி எருக்கிலை ஓறொண்டு நாளி சாறு காண்டை நொச்சி பெருமருந்து குதிரை வாலி காட்டு மல்லிகை சிவதை முருக்கு நன்னாரி முத்தக்காசி இலாமிச்கை பெரும் குருந்து சன்னி நாயகன் இவை ஒவ்வொன்றும் காசிடை (1 களஞ்சி) கொள்ளவும்.

**வேறு**

நேர்வாளம் கடுக்காய் உள்ளி வெந்தயம் அசமதாகம் வேப்பம் பிசின் சாறணைக் கிழங்கு அரைத்துக் கரைத்துக் காய்ச்சி ஆமணக்கெண்ணெயில் கொடுக்கவும்.

Copyright @ 2022 Eastern University Sri Lanka

**மலம் சலம் மறிப்புக்கு**

ஆமணெக்கெண்ணெயும் ஆவின் நெய்யும் காய்ச்சி இளஞ் சூடாக மேல் வயிறும் கீழ் வயிறும் பூசவும். பிறகு ஆமணக்கம் பருப்பு ஒரு பிடி நேர்வாளம் பருப்பு நாலுபிடமிட்டு இந்துப்பு கடுகுரோசனை பெருங்காயம் உள்ளி அரைத்து இளநீரில் கொடுக்கவும்.

**வேறு**

திராய் வேரும் காக்கணம் வேரும் உள்ளி வசம்பு அரைத்து காய்ச்சிக் கொடுக்கவும். நுணாவிலைச்சாறு சிறங்கை களல் கொழுந்து களஞ்சி மிளகும் அரைத்து காய்ச்சிக் கொடுக்கவும்.

**கற்பத்தில் பல வாய்வுக்கும்**

திரிவாசி கோட்டம் குங்குமப் பூ ஓமம் அவரை வெல்லம் பட்டை இவை மாவாக்கி நல்லெண்ணெயில் கிண்டித் தின்னவும்.

**வேறு**

**சன்னிக்குக் கொதி எண்ணெய்**

தயிர்விளா உத்தமாகாளி குப்பைமேனி மாவிலங்கை எரிக்கிலை சாறணை முருங்கை காண்டை சன்னிநாயன் ஈசுரமூலி உலர் தூதுவளை அவுரி வேர் காத்தொட்டி இலை வேர் உள்ளி வசம்பு இருசீரகம் திப்பிலி கொத்தமல்லி சதகுப்பை கடுகு வேர்க்கொம்பு இவை வேரும் சரக்கும் வெவ்வேறாக எடுத்து வைத்து வேப்பெண்ணெய் வெற்றிலை வடித்த பதத்தில் இறக்கி தூளும் சரக்கும் போட்டு பொருத்தி உள்ளுங் கொடுக்க சன்னி தீரும்.

**கிரந்தி எண்ணெய்**

செங்கத்தாரி கொச்சி முடக்கொத்தான் மூன்றும் சமமாக களஞ்சி வேரும் இலையும் புங்குவேர் இசங்கு வேர் பீச்சு விளாத்தி வேரும் இலையும் கிரந்தி நாயகன் சமூலம் செருப்படி சமூலம் நீர்முள்ளிச் சமூலம் வேலிப்பருத்தி வேர் வெள்ளறுகு சமூலம் சிவனார் வேம்பு கண்டங்கத்தரி வேர் வேம்பாடல் அவரை திப்பிலிமூலம் கடுகுரோசனை பீ நாறி இருசீரகம் செஞ்சந்தணம் வசம்பு செவ்வள்ளி ஆமணக்கெண்ணெய் ஏழு கசாயம் இட்டு மெழுகு பதத்தில் காய்ச்சி வடித்து உண்ணவும். பத்தியம் பிடிக்கவும்.

Copyright @ 2022 Eastern University Sri Lanka

### காதில் வெடி சன்னிக்கு

சுக்கு மிளகு திப்பிலி உள்ளி வசம்பு கடுக்காய் சாதிக்காய் கராம்பு வசுவாசி ஏலம் இலவங்கம் மாசாக்காய் கைப்பு களிப்பாக்கு பெருமருந்து வேர் வெல்லம் பட்டை நன்னாரி கொன்றைக் கடுக்காய் எருக்கலை விளாவிலை வேர் வகைக்கு ஒரே அளவாக எடுத்து குள நண்டும் சேர்த்து வேப்பெண்ணெய் நல்லெண்ணெய் அரை நாளி விட்டு பதமாய்க்கி காய்ச்சி வடித்து தலையிலும் தேய்த்து காதிலும் அடைக்கவும்.

### வெடி சன்னிக்கு எண்ணெய்

நல்லெண்ணெய் திப்பிலி அதிமதிரம் உள்ளி வெவ்வெள்ளி கொத்தமல்லி அசமதாகம் நற்சீரகம் சதகுப்பை மிளகு கைப்பு வேம்பாடல் வெளுத்தல் பிசின் நாயுருவி வேர் சீதேவியார் செங்கழுநீர் தூதுவளை நன்னாரி நிலக்குமிழ் உத்தமாகாளி அவரை வேர் கூட்டிக் காய்ச்சி காதிலிடவும்.

### காதுக்கு சீழ் வடிதல்

வட்டு வேர் முருங்கை வேர் முருங்கையிலைச்சாறு உள்ளி வசம்பு குளநண்டு வேம்பெண்ணெயில் காய்ச்சி தண்ணீர் இல்லாமல் காதிலிடவும்.

### நாசிப்பிடிப்புக்கு (நாசி வீக்கம்)

இதரம் கெந்தகம் சாதிலிங்கம் அவின் குந்திரிக்கம் பாசாணம் ஆவின் நெய்யில் அரைத்து விரவாளிப்பட்டில் தடவி நிழலிலுலர்த்தி நெய்யில் தோய்த்து கொழுத்தி நூற்றுவிட்டு மூக்கில் குழல் வழியே மூக்கில் விடவும். பத்தியம் முருங்கையிலை காய் பசுப்பால் நெய் கோழி முட்டை – திரியை நூற்று ஆற்றிக் கொள்ளவும்.

### வேறு

அரிதாரம் சவுக்காரம் இந்துப்பு சிறுபயறு திற்பிலி மஞ்சள் - க- உ (11களஞ்சி) எட்டொன்றாக்கி காய்ச்சி உள்ளுக்கும் வாய் கொப்பளிக்கவும்.

Copyright @ 2022 Eastern University Sri Lanka

**உய** -20

**வேறு**

இளநீர் வெற்றிலை கையான் தகரைச்சாறு பசுப்பால் எலுமிச்சம் புளி ஓரொண்டு கொத்து மிளகு சிறங்கை பாலில் அவித்துக் கொள்ளவும். செங்கோட்டம் செஞ்சந்தனம் தேவதாரம் அதிமதுரம் வாலுளுவை வெட்பாலரிசி கராம்பு திற்பிலி மூலம் கோட்டம் தற்கோலம் செண்கப்பூ கொத்தமல்லி கருஞ்சீரகம் அசமதாகம் ஓரொண்டு ஒரு நிரையாய் எடுத்து அரைத்து கரைத்து பதத்தில் வடித்து தலையில் வார்க்கவும் நீர்பாய்ச்சல் கண்ணெரிவு நாசிநீர் விழுவது தும்மல் நீர்ச்சியாப் பீடனம் மண்டைக்கரப்பன் சூலை மாறும்.

**வேறு – அஞ்சனக்கலிங்கம்**

திரிகடுகு வசம்பு உள்ளி சிறந்த சாறனைக்கிழங்கும் அவித்துக் காலை நேரம் நேர்வாளம் வித்து கடியதோர் தலை அரப்பு தானும் கூட்டிநேராகச் சிறுக வெட்டி தேசிக்காய் பிழிந்து வைத்து அந்தப் புளியை விட்டு பக்குவமாய் அரைத்துருட்டிக் கண்ணில் போடேன். போட்ட பின் கபால சன்னி மண்டை சூலை பொருத்தமில்லா முகரோகம் வாட்டமில்லா ஒரு தலை வலி மருண்ட சன்னி பேய் போக்கும்.

**வேறு**

மகோதரக்கரப்பன் வீக்கத்துக்கு வேறு – வெளவால் ஒட்டி இலை நீர்முள்ளி இலை நாடஞ் சுரை இலை ஆட்டுக் கோமியம் இந்துப்பு பணவிடை திற்பிலி பணவிடை இவை கொண்டு குடிநீர் காய்ச்சிக் கொடுக்கவும்.

21. **வீக்கத்துக்கு குடிநீர்**

ஆடு தின்னாப் பாலை காஞ்சோன்றி குப்பைமேனி பிரமி இலை இவை ஒரொன்று பிடி கடுக்காய் எட்டு சுக்கு தோல் சீவி கைப்பிடி திற்பிலி இந்துப்பு கருஞ்சீரகம் ஒரொண்டு களஞ்சு (-க- 01) நாளி தண்ணீர் விட்டுவிட்டுக் காய்ச்சி மூன்று நாள் ஆறு தியாலம் காற்கொத்தளவாகக் கண்டு ஆறுபடி திற்பிலி இந்துப்பு பொடி இட்டுக் குடிக்க மாறும்.

**சிவதை குடிநீர்**

செவ்வியம் திற்பிலி கண்டங்கத்தரி முத்தக்காசு. கற்கடகசிங்கி தேவதாரம் கொடிவேலி சித்தாமட்டி வேர் சுக்கு மிளகு மரமஞ்சள் சீந்தில் ஆடாதோடை சிறுதேக்கு நாய்வேளை கோட்டம் சிறுமூலம் பகரும் புயத்திற்பிலி கொத்தமல்லி இவை எட்டொன்றாகக் காய்ச்சி

Copyright @ 2022 Eastern University Sri Lanka

குடிக்கவும். – பித்த சுரக் குடிநீர் கோட்டம் சுக்கு மலைதாங்கி இலாமிச்சை வேர் முத்தக்காசு. சிறு காஞ்சோன்றி வேர் வல்லாரை இலை அத்திப்பட்டை ஓரொண்டு களஞ்சு (4) ஒன்றாய்க் காய்ச்சி கொடுக்கவும்.

வேறு உதரக்களிச்சல் தாகம். வறட்சி. என்பன தீரும்.

**உய** 22

**சுரத்துக்கும் வயிற்றுக் களிச்சலுக்கும்**

கடுக்காய் கடுகுறோசனை கொத்தமல்லி சிறுதேக்கு சிவதை பயறு சிறு காஞ்சோன்றி நிலவேம்பு சந்தனம் இவை நாளொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்கவும்.

**நாலாம் முறைக்காய்ச்சலுக்கு (மலேரியா)**

கஞ்சா அவின் மிளகு எழுமுறையாக வறுத்தெடுத்து நீற்றுப் பூசணிக்காயை வெட்டி சாறு பிளிந்து விட்டரைத்து மிளகளவு உருண்டை செய்து மூன்று சுரத்துக்கும் வெந்நீரில் கொடுக்கவும்.

**வேறு**

கோளைக்கு – அதிமதுரம் களஞ்சி கஉ (11) உலுவா களஞ்சி-ங (3) தேங்காய்ப் பால் சீனட்டிப் பச்சை அரிசி கூட்டிக் கஞ்சிக் காய்ச்சிக் குடிக்கவும்.

**கெற்பளிக்கு குடிநீர்**

சுக்கு கடுக்காய் களிப்பாக்கு கருவேப்பிலை ஓரொன்று ங- (3) பலம் இருநாளி தண்ணீர் உளக்காக்கி கொடுக்கவும். வெதுப்பு மாறும்.

**சுரத்துக்கு குடிநீர்**

கோட்டம் இருவேலி சுக்கு தேவதாரம் சிறுகாஞ்சோன்றி வேர் வட்டு வேர் ஆடாதோடை வேர் சீந்தில் இலாமிச்சை கண்டங்கத்தரி வேர் நாளொன்றாய்க் காய்ச்சிக் குடிக்கவும். கைகண்டது.

**வீக்கம் பலதுக்கும் கோமியக் குடிநீர்**

தேவதாரம் நிலவேம்பு பற்படாகம் சீந்தில் பேய்ப்புடலை நாவல் துளிர் அத்தித்துளிர் அரசற்துளிர் இத்தித் துளிர் மாந்துளிர் முத்தக்காசு ஓரொண்டு களஞ்சி – ங- 3 நாளொன்றாய்க் காய்ச்சி கொடுக்க தீரும் வியாதி. வயிற்று பொருமல் களிச்சல் தாகம் அருவருப்பு தொய்வு(ஆஸ்மா) காய்ச்சல். தலைக்கணப்பு இவை- கைகண்டது.

Copyright @ 2022 Eastern University Sri Lanka

**உரு** 23

**வீக்கம் பலதுக்கும் கோமியக் குடிநீர்**

சித்தாமட்டி சீந்தில் வெள்ளைச் சாறனை வேர். ஓரொன்று இரு களஞ்சு- கடுக்காய் எட்டு இவை நறுக்கி நாளி பசுவின் கோமியம் விட்டு தூளாக்கி மூண்டு நாள் அந்திசந்தி குடிக்கவும். வீக்கம் மாறும். இது கைகண்டது. கிரந்தி கொண்ட உணவு புளி தவிர்க்கவும்.

**வேறு**

குப்பிளா பிரமி இசங்கு வவ்வாலொட்டி எருமை முல்லை நீர்முள்ளி ஓரொண்டு திமிறு பிடி கொண்டு வசம்பு களஞ்சி உ- 2 அரத்தை களஞ்சி (உ-2) மிளகு சிறங்கை உள்ளி சிறங்கை கடுக்காய் -யரு (15) இவை தட்டிப்போட்டு (ய-10) படி தண்ணீர் விட்டு ஒண்டரைப்படியாய்க் காய்ச்சி நாளொண்டுக்கு சற்றுச்சற்றே குடிக்கவும். கைகண்டது.

**வேறு**

**மஞ்சள் காமாளைக்கு- மஞ்சள் காய்ச்சல்**

சீனி பலம்- கட்டி உப்பு களஞ்சி – க 01 தூளாக்கி சீனியில் போட்டு தண்ணீர் விட்டு கலக்கி மூன்று தியாலம் குடிக்கவும். கை கண்டது

**உவாந்தி அருவருப்புக்கு குடிநீர்**

கண்டம் கத்தரி கோட்டம் முத்தக்காசி சிறுகாஞ்சோன்று சீந்தில் பற்பாடகம் சிறுதேக்கு நிலவேம்பு களஞ்சு – உ- எட்டொன்றாக்கி காய்ச்சி கொடுக்கவும்.

**வேறு**

**நாவறட்சிக்கு**

மண்பானையில் சந்தனம் தப்பி உள்ளும் தடவி உமிக் காந்தலில் கவிழ்த்து சிக வறுத்துக் கொண்டு குடத்தில் தண்ணீர்விட்டு ஆறமுதலே கறுவாத்துளிர் மாந்துளிர் கொத்தமல்லி வறுத்து இலாமிச்சம் வேர் தேனிவை கூட்டி நன்றாகக் கலக்கி நன்றாக வடித்துக் கொண்டு குடிக்கவும். உவாந்தி விக்கல் சளிச்சல் (சளித் தொல்லை) நாவறட்சி உழலை பதபதப்பு இவை தீரும்.

Copyright @ 2022 Eastern University Sri Lanka

**உ௳ (24)**

### சுரத்திற்கு கருக்கல்

திப்பிலி அசமதாகம் உள்ளி வசம்பு கொத்தமல்லி பனைஓலை தளப்பத்து ஓலை தண்ணீர் விட்டுக் காய்ச்சி பதத்தில் இறக்கிக் கொடுக்கவும்.

### வேறு சுரத்திற்கு

சுத்த நெற் பொரியும் சுக்கும் குவளை வேரும் கூட்டிக் காய்ச்சிச் குடிக்க சத்தி அருவருப்பு தாகமும் தீரும்.

### உதர வாயுவுக்குக் குடிநீர்

பருத்தி இலை புளி இலை கையான் தகரை எலுமிச்சம் புளி ஓரொண்டு களஞ்சி எடுத்து கருஞ்சீரகம் கோட்டம் ஏலம் அதிமதுரம் பெருங்காயம் அவின் இவை களஞ்சி ங (3) இரும்புக்கிட்டம் களஞ்சி –ங-(3) ஊசிக்காந்தம் மிளகு உள்ளி களஞ்சி –ங-(3) களஞ்சி கல்மதம் வெடி உப்பு இவை கூட்டி மூன்று நாள் நிலத்திற்குள் புதைத்து எடுத்து அரைத்து குன்றிமணியளவு உருட்டி நிழலில் உலர்த்தி ஏழு நாள் மூன்று நேரம் வெந்நீரில் குடிக்கவும். முருங்கைக்காய் பொன்னாங்காணி சாம்பல் வாழைக்காய் உரும்பிரக்கி (திராய்) சுறாக்கருவாடு ஆறும். உப்பு புளி தவிர்க்கவும். அடைப்பு செங்கமாரி மூலவறட்சி மஞ்சள் காமாலை வயிற்றுநோவு தலைசுற்று இவை தீரும்.

**உ௫ (25)**

### காயம் வீக்கத்திற்கு

திராய் இலை நிறைய எடுத்து அவித்துப் பிளிந்து உள்ளி மிளகு ஒவ்வொரு சிறங்கை கொண்டு அந்தச் சாற்றில் அரைத்து குளம்பாகக் காய்ச்சி அந்தியில் ஏழு நேரம் உண்ண வயிற்றுப்புண்(அல்சர்) கட்டுப்பட்ட கள்ளத் தண்ணீர் உதிரமும் காயம் வீக்கம் தீரும். சலமுங் களியும்.

### குடிநீர் அல்சர்

நீர் முள்ளி ஓரத்தண்டு ஆடுதின்னாப் பாலை பீச்சு விளாத்தி பனம்பூ இசங்கு வீழி வெளவால் ஒட்டி கடுக்காய் மிளகு உள்ளி சுக்கு எட்டு களஞ்சி காய்ச்சிக் குடிக்கவும்.

Copyright @ 2022 Eastern University Sri Lanka

**வேறு வீக்கத்திற்கு**

நிலப்பாகல் பொரிகாரம் வௌவால் ஒட்டி கருவேப்பிலை திருக்கொன்றை திப்பிலி அதிமதுரம் சுக்கு கோட்டம் கடுகுரோசனி மஞ்சள் ஓமம் சீனாக்காரம் இந்துப்பு இருசீரகம் நாலொன்றாய்க் காய்ச்சிக் குடிக்கவும். கிரந்தி வீக்கம் காய்ச்சல் இரச்சல் தீரும்.

**சிலேட்டுமத்திற்கு ஏனாதி**

இருசீரகம் உள்ளி சுக்கு மிளகு திப்பிலி கடுக்காய் அசமதாகம் நெல்லி அரத்தை இந்துப்பு கோட்டம் நெல்லிக்காய் கராம்பு வசுவாசி சாதிக்காய் தூதுவளை வேர் வெட்டுவேர் காஞ்சோன்றி வேர் முத்தக்காசு நன்னாரி வேரும் வேரும் சரக்கும் இடித்து அளவுக்கு சீலையில் பொட்டணி கட்டிப் போட்டு கஞ்சி காய்ச்சி அவிந்ததன் பின் எடுத்து அரைத்து இரண்டகப்பைக் கஞ்சியில் கரைத்துக் குடித்து மற்றக்கஞ்சியும் குடிக்கவும்.

26. **வேறு சிலேட்டுமத்திற்கு ஏனாதி**

நெல்லிக்காய் தான்றிக்காய் திப்பிலி சிறுதேக்கு கற்கடகசிங்கி கோட்டம் மிளகு வடித்து நறுநெய்யில் கொடுக்கவும்.

**இருமலுக்கு**

கையான் தகரை இலுமிச்சை கனத்த ஆடாதோடை இலை மெய்ய மிளகு இந்துப்பு விளங்கத் (வாய்விளங்கம்) திற்பிலி பொடி செய்து நெய்தான் தேனிற் குளைத்து நேர்மையுடன் கொள்வீராயின் இருமல் தீரும்.

**இருமலுக்கு குளம்பு**

சாதாளைச்சமூலம் கொவ்வைச்சமூலம் குண்டுமணிச்சமூலம் இவை சரி கொண்டு அரைத்துப் பிளிந்து கோரோசனை கோட்டம் சாதிக்காய் வசுவாசி கராம்பு திற்பிலி கெருடப்பாசானம் அசமதாகம் வெங்காயம் தேத்தாங்கொட்டை ஓரொண்டு ஒரு களஞ்சி சந்தனம் காற் களஞ்சி பனங்கருப்புக்கட்டி கரைத்துக் காய்ச்சி குளம்பாக்கி உண்ண இருமல் தீரும். இது கைகண்டது.

**வேறு இருமலுக்குக் குளம்பு**

கராம்பு வசுவாசி சாதிக்காய் உள்ளி மிளகு சுக்கு இருசீரகம் சிறுதேக்கு அரத்தை ஏலம் வசுவாசி மாஞ்சில் திப்பிலி ஓரொண்டு களஞ்சி வல்லாரை கற்பூரவள்ளி பிரமி தூதுவளை கனாந்தி மாதுளம்பழம் பசுப்பால் நெய் பச்சைப் பயறு இரண்டு சிறங்கை சீனி இதுவெல்லாம் குளம்பாகக் காய்ச்சி இரண்டு நேரம் பாக்களவு உண்ணவும். உப்பு புளி தவிர்க்கவும்.

Copyright @ 2022 Eastern University Sri Lanka

**இருமல் மேல் மூச்சு வாதத்திற்கு**

கராம்பு அதிமதுரம் சிறுதிப்பிலி மிளகு சுக்கு வறுத்திடித்து பிடமிட்டு கற்கருப்பட்டி போட்டிடித்து உண்ணவும்.

**இருமலுக்கு**

உள்ளி மிளகு சுக்கு வசம்பு ஆடாதோடை இலை மாவிலங்கை இலை இரண்டும் தண்ணீர் விட்டரைத்து சரக்கைக் கரைத்து கொதிப்பித்து ஆறவிட்டு உண்ணவும். கைகண்டது.

**இருமலுக்கு வேறு மருந்து**

தூதுவளம்பழம் ஒரு சிறங்கை கருஞ்சீரகம் திப்பிலி கராம்பு சாதிக்காய் ஏலம் வில்வபத்திரி வேர் இதுவெல்லாம் அரைத்துக் கரைத்து அளவுக்கு நறுநெய்யில் காய்ச்சி வடித்து உண்ண இருமல் மாறும்.

**வேறு**

வறட்சி இருமலுக்கு தேத்தாங்கொட்டை இரண்டு சுட்டு நஞ்சு தள்ளி அரைத்து மாவாக்கி வெள்ளாட்டு எண்ணெயில் மூன்று நாள் கொடுக்கவும். உப்பு புளி தவிர்க்கவும். சிறு கீரை பாகற்காய் கூட்டவும். வெய்ய தண்ணீர் பறிமாறவும்.

**வேறு - இருமலுக்கு**

ஆகாச மூலி இலையும் (ஆகாயக் கொத்தான்) கொடியும் அரைத்து அந்தச்சாற்றில் பாறு குறுணல் அரிசி போட்டு (வட்டரிசி) கஞ்சி காய்ச்சி அதில் உள்ளி வேர்க்கொம்பு மிளகு போட்டுக் கலக்கி மூன்று நேரம் குடிக்கவும்.

**இருமல் ஈளைக்கு (ஆஸ்மா)**

கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் கருஞ்சீரகம திற்பிலி பேரரத்தை அசமதாகம் சுக்கு இவை சரிசமன் எடுத்து பொடி செய்து தேனில் வெருகடிப் பிரமாணம் தின்னவும். உப்பு புளி தவிர்க்கவும். கிரந்தி இல்லாத கறி கூட்டவும்.

**கோளை இருமலுக்கு**

நொச்சி வெள்ளைச் சாறணை செருப்படி ஆடாதோடை இலை ஓரளவு கொண்டரைத்து உறட்டி சுட்டு நல்லெண்ணெயில் ஒரு நாள் ஒரு நேரம் ஒரு உருண்டை தின்னவும். – ரு (5) நாளைக்கு தின்னவும்.

Copyright @ 2022 Eastern University Sri Lanka

**காயா சுவாதத்திற்கு ஏனாதி சூரணம்**

இனிய நெல்லி கடுகு தான்றி இனிய கோட்டம் அதிமதுரம் வண்ணச்சுக்கு (வேர்க்கொம்பு) கடா மஞ்சள் வளரும் கண்டங்கத்திரி வேர் சின்னத்திப்பிலி சிறுதேக்கு சேரும் இந்துப்பு இவை சமனாய் மின்ன (பொன்நிறத்தில்) வறுத்துப் பொடி செய்து வைத்துக்கொண்டு வெருகடி இஞ்சிச் சாற்றில் கொள்ளவும்.

27. **புளியிலைக் காயம் - கெற்ப வாசு பலதுக்கும்**

மிளகு இந்துப்பு பெருங்காயம் ஓரளவாய் எடுத்து புளியிலை நீண்ட நேரம் அவித்து துவைத்துப் பிளிந்து சரக்கரைத்து இந்தத் தண்ணீரில் காயம் காய்ச்சிக் கொடுக்க துவாலை இறைக்கும். பளுத்த புண்ணும் ஆறும். வாயுவும் தீரும்.

**வேறு**

உள்ளி வெற்றிலை முருங்கை வேர் கொடிக்களச்சி விட்டுணுகிராந்தி நொச்சி இலை இவைச்சாறு சரி கண்டெடுத்து பெருங்காயம் அதிமதுரம் திற்பிலி கராம்பு வசிவாசி இந்துப்பு கோட்டம் கடுக்காய் இருசீரகம் சாதிக்காய் இவையும் சரிகொண்டு நேர்வாளம் சரக்கின்பாரம் சரக்குடன் கலந்து பத்தில் பாதியைப் பிரித்து நேர்வாளம் போட்டுக்கிண்டி நேர்வாளம் போட்டது முன்னமும் மற்றது பின்னமும் மூன்று நாளைக்கு ஒவ்வொரு நேரமும் கொட்டைப் பாக்களவு கொடுக்கவும். பெருவயிறு பெரும்பாடு கொளுவல் கெற்ப வாயு கெற்ப சூலை இவை எல்லாம் தீரும்.

**வாய்வுக் கஞ்சி (வாசுக்கஞ்சி)**

நொச்சி கொன்றை மாவிலங்கை சாறனை கொழுந்து ஒவ்வொரு பிடி உள்ளி உலுவா நற்சீரகம் தேங்காய்ப் பாதி மருந்தைப் பொட்டணி கட்டி கஞ்சியில் அவிய விட்டு நசித்து முதற்குடித்து பிறகும் கஞ்சி குடிக்கவும் மூன்று நேரம்.

**வேறு**

**புளி இலைக் குளம்பு**

காந்தம் களஞ்சி – ங-(3) அரப்பொடி களஞ்சி –ங- இரும்புக் கிட்டம் ஒருபிடி கடுகு மிளகு உள்ளி இவை ஒவ்வொரு பிடி காடி இரண்டு கொத்து விட்டு புளி இலை அவித்துப் பிளிந்து சரக்கரைத்துக் கரைத்து குளம்பாகக் காய்ச்சி நறு நெய் விட்டு புளிபதமாகக் கொடுக்கவும். மகோதரம் முழுவீக்கமும் மாறும்.

Copyright @ 2022 Eastern University Sri Lanka

28. **பிள்ளை உடையார் வாசிக்கஞ்சி**

உள்ளி களஞ்சி –க- வெந்தயம் முக்கால் களஞ்சி சீனக்காரம் கால் களஞ்சி களச்சிப் பருப்பு காற்களஞ்சி இவ்வளவும் கிண்ணியிலிட்டு தேங்காய் தலைப்பாலும் விட்டு சட்டி தண்ணியின் மீதே கிண்ணியை வைத்து குறுணல் கஞ்சி காய்ச்சின தண்ணீரில் அரைத்துக் கலக்கிக் குடித்துக் கஞ்சியும் குடிக்கவும். மூன்று நேரம்.

**தாளங்காய் எண்ணெய்**

சித்தாமட்டி பேராமட்டி நன்னாரி கோரைக் கிழங்கு இருவேலி இலாமிச்சை கொடிவேலி தாளம்பழம் சந்தனம் ஆவின்பால் ஒரொண்டு பலம் களஞ்சி சித்தரத்தை சதகுப்பை மாஞ்சில் பச்சைமஞ்சள் கச்சோலம் அதிமதுரம். கோட்டம் ஏலம் இலவங்கம் நறும்பிசின் களஞ்சி – க- அரைத்துக் கரைத்து கசாளமிட்டு காய்ச்சி பதத்தில் வடித்து உள்ளுக்கும் கொடுத்து தலையிலும் வைத்து பத்தியம் பிடிக்கவும். - எண்ணெய் - நல்லெண்ணெய்

**வேறு**

சிறுகுருந்து புங்கு கல்முரசு நிலப்பன்னை களல் பன்னை கருணையாலியம் பட்டை வேர் சாறு கொடிவேலி தூதுவளை வேர் வட்டு வேர் - (இவை வேர்) எருக்கிலம் சமூலம் நொச்சி சமூலம் ஆணைக் களச்சி கவுதும்பை தயிர் வேளை இலை இலைக்கள்ளி கையான் தகரை ஆடாதோடை வெட்பாவட்டை முருங்கை மாவிலங்கை இவை இலைச்சாறு – சரக்கு ஏலம் இலவங்கம் மஞ்சள் கடுகு மிளகு சுக்கு ஓமம் அதிவிடையம் சிறு தேக்கு உள்ளி பெருங்காயம் சதகுப்பை சாதிக்காய் கராம்பு வசுவாசி துத்தம் துருசி அக்கிறகாரம் மாசாக்காய் அரத்தை நேர்வாளம் நல்லெண்ணெய் வேப்பெண்ணை ஆமணக்கெண்ணை சானாகப்பதம் அல்லது தென்னோலை வெடித்த பதம் - தீரும் வியாதி சூலை முடக்கமும் தீரும். உப்பு புளி தவிர்க்கவும் தலைக்கும் வைத்து உள்ளுக்கும் ஒரு காசிடை தின்னவும். அரப்புவிட்டு வெந்நீரால் முழுகி எண்ணெய் களற்றவும்.

29. **கிரந்தி எண்ணெய்**

இரு சீரகம் வெண்காரம் மஞ்சள் மிளகு ஏலம் இலவங்கம் அரத்தை வெளுத்தல் பிசின் செண்பகப்பூ கச்சோலம் அதிமதுரம் நொச்சி வேர் கறுக்காய் நீலகு முள் வட்டு வேர் பொன்னாங்காணிச் சமூலம் முத்தக்காசு. இருவேலி இலாமிச்சை வேரும் சரக்கும் தூளாக்கி பிடமிட்டு நல்லெண்ணெய் வேப்பெண்ணெய் ஆமணக்கெண்ணெய் (ஒரேயளவு) எலுமிச்சம் புளி விட்டு கூட்டி மூணுநாள் கசாளமிட்டு முறிபதத்தில் வடித்து உள்ளுக்கம் தின்று தலைக்கும் வைக்கவும்.

Copyright @ 2022 Eastern University Sri Lanka

உப்பு புளி தவிர்க்கவும். குணங்கண்டு அரப்பு இலுமிச்சங் காயால் முழுகி எண்ணெய் களற்றவும். தீரும் வியாதி. தொய்வு இளைப்பு கைகால் பிடிப்பு உளைவு குத்து முடக்கம் தீரும். ஆஸ்மாவும் தீரும். வெந்நீர் பரிமாறவும். உப்பு வறுத்துக் கூட்டவும்.

**வாதத்தெண்ணெய் (விசவாதத்தெண்ணெய்)**

பெருங்காயம் பொன்னரிதாரம் அயமதாகம் உள்ளி வசம்பு கடுகு மிளகு ஓரொண்டு களஞ்சி (உ-2) சாறனை நொச்சி ஆடாதோடை எருக்கலை காண்டை வாதமடக்கி கொடிவேலி வெண்தில்லை இவை ஒவ்வொன்றும் சமூலம் வேர் எல்லாம் சீவியரைத்து இலைச்சாக ஒவ்வொரு சிரட்டை விட்டு கசாளமாக்கி மூன்று நாளைக்குப் பிறகு பதத்தில் வடித்து நோவிலும் பூசி தலையிலும் தேய்க்கவும். உள்ளுக்கும் இரண்டு பணவிடை உண்ணவும். பத்தியம் உப்பு பிளி விடவும்.

**சன்னிக்கு கொதி எண்ணெய்**

நொச்சி சித்தாமட்டி காத்தொட்டி கல்முரசு சிவனார் வேம்பு சீதேவியார் செங்கழுநீர் களப்பன்னை அவுரி எருக்கு குதிரைவாலி முத்தக்காசு இவை சமன் எடை எடுக்கவும். சரக்குவகை கோட்டம் திரிகடுகு வசம்பு வெளுத்தல் பிசின் சித்தரத்தை ஏலம் இலவங்கம் நெறுவீழம் (நேர்வாளம்) கச்சோலம் இந்துப்பு கொத்தமல்லி கடுகுறோசனை கடுஞ்சீரகம் அதிவிடையம் பெருங்காயம் களஞ்சி – க- (1) தூளாக்கி சிறங்கை எண்ணெய்க்கு இரண்டு பிடி தூள் வெற்றிலை வடித்த பதத்தில் இறக்கி தலைக்குப் பொருத்தவும் பத்தியம் உப்பு புளி தவிர்க்கவும். எண்ணெய் வேம்பு (வேப்பெண்ணெய்க் காய்ச்சவும்).

**30. சன்னிக்கு காயம்**

தூதுவளை வேர் காத்தெட்டி வேர் கண்டங்கத்தரி வேர் கல்முரசு நொச்சி வேர் உள்ளி கடுக்காய் கடுகு வசம்பு திற்பிலி அதிமதுரம் கராம்பு காவரிசி (கார் போக அரிசி) கருஞ் சீரகம் கடுகு ரோசனி இந்துப்பு தான்றிக்காய் சமன் கொள்ளவும். ஆடாதோடை சாறு செருப்படிச்சாறு கலந்து கரைக்கவும். சரக்கை அரைத்து கொதிப்பித்து உள்ளுக்கும் கொடுத்து தலையிலும் பொருத்தவும்.

Copyright @ 2022 Eastern University Sri Lanka

**கெற்ப வாசு வயிற்று வலிக்கு**

நேர்வாளம் பெருங்காயம் இந்துப்பு சவுக்காரம் உள்ளி பலம் - உ-(2) தேங்காய் திருவி அவித்துப் புளிந்து காய்ச்சி தின்ன வயிற்றுவலி கெற்பவாசு வெப்பு பாவை காமாளை பாண்டு ரோகம் சறுவமும் மாறும்.

31. **மாந்தத்துக்கு எண்ணெய்**

கையான் தகரை பொன்னாங்கண்னி முசுமுசுக்கை சீந்தில் சாத்தாவாரி தாளை விழுது பசுப்பால் இளநீர் இலுமிச்சம் புளி ஓரொண்டு கொத்து இரு சந்தனம் முத்தக்காசு இருவேலி இலாமிச்சை தான்றிக்காய் கச்சோலம் சுக்கு மலைக்குருவேலி மஞ்சள் சமுத்திரப் பச்சை குங்குமப் பட்டை. செவ்வள்ளி அதிமதுரம் ஏலம் இலவங்கம் கராம் நாகம் திற்பிலி கோட்டம் செண்பகப் நல்லெண்ணெய் நாளிவிட்டு ஏழுநாள் கசாயமிட்டு முறிபதத்தில் காய்ச்சி வடித்து காசிடை தின்னவும். மந்தம் மாறும். உப்பு புளி தவிர்க்கவும்.

**ஞஉ** 32

**பல வியாதிக்கும் எண்ணெய்**

இருசீரம் கொத்தமல்லி உள்ளி வசம்பு பீநாறி மாசாக்காய் சுக்கு கைப்புக் களிப்பாக்கு கடுக்காய் செஞ்சந்தனம் கராம்பு வசுவாசி சாதிக்காய் ஏலம் இலவங்கம் செவ்வள்ளி அதிமதுரம் இதரம் இவை ஓரொன்று களஞ்சி க-1 சீனப்பா கலஙஞ்சி- உ- மொசு மொசுக்கை கோளி அவரை செம்பருத்தியம் பூ மாதாளம் பூ பிஞ்சு கிரந்தி நாயகன் வேர் சிறுகுறிஞ்சா வேர் கண்டங்கத்திரி வேர் வேலம்பட்டை கிளுவப்பட்டை அத்திப்பட்டை புங்கம் பட்டை நாலளவு தண்ணீர் விட்டு நாலொன்றாய் காய்ச்சி வடித்துக் கொண்டு சரக்கும் வேரும் அரைத்து கசாளம் இட்டு பதத்தில் வடித்து உள்ளுக்கும் திண்டு தலை மேலும் பூச கெற்பப் புண் கரப்பன் கிரந்தி 18 வீக்கம் பிடிப்பு உளைவு மாறும்.

**ஙங-33-கண்டக் கிரந்தி கட்டுக்கு எண்ணெய்**

தேசி குருந்தில்லை வேர் தோடை வேர் சிறு காஞ்சோண்டி வேர் வெருகல் கிழங்கு பனையறுப்பானிலை பெருங்குருந்து பிரண்டை சமூலம் வட்டு கண்டங்கத்திரி சிறுகாஞ்சோண்டி இலை தேசி இலை மொசு மொசுக்கை இலை இவைசாறெடுத்து இலையிற் பிடி இலையும் சரக்கும் வேரும் அரைத்து தேங்காய் ஆறு பழங்காய் திருவி அவித்து துவைத்து சாறெடுக்கவும் மருந்தைக் கரைக்கவும் பிறகு காய்ச்சும் போது எருக்கிலம்பால் ஒரு சிறங்கை விடவும்

Copyright @ 2022 Eastern University Sri Lanka

பதத்தில் வடித்து நய்யம் பண்ணவும் கொடுப்பிலடக்கவும் உள்ளுக்கும் கொடுக்கவும் கட்டியில் (கட்டில்) பூசவும் இவைக்கு சரக்கு கோட்டம் பெருங்காயம் மிளகு உள்ளி வசம்பு ஏலம் கைகண்டது.

**ஙச 34 வேறு**

சுக்கு வசம்பு பூமத்தை ஒருபிடி தயிர்வேளைச்சாறு கொத்து 4 எருக்கிலஞ்சாறு கொத்து 4 வேப்பெண்ணெய் கொத்து 4 சரக்கரைத்து பதத்தில் வடித்து உள்ளுக்கும் திண்டு தலையிலும் தேய்க்கவும். உப்பு புளிப்பு இனிப்பு தவிர்க்கவும். வெந்நீர் பரிமாறவும்.

**பிள்ளை உடையார் கிரந்தி எண்ணெய்**

உள்ளி நேர்வாளம் மிளகு சுக்கு திப்பிலி கடுகு மஞ்சள் பெருங்காயம் இருசீரகம் திறிவாசி வெந்தயம் ஓமம் வெளுத்தல் பிசின் சீனக்காரம் கெந்தகம் துருசு கல்நார் கடுக்காய் ஒரொன்று களஞ்சி –க- வேர்வகை குதிரை வாலி அவுரி நொச்சி மஞ்சை ஆடாதோடை வட்டு முருங்கை தூதுவளை வெள்வேலம் சராணை காண்டை காத்தொட்டி பெருமருந்து சீந்தில் ஓரொண்டு களஞ்சி 1 கொடிவேலி களஞ்சி 2 நெய்க்கொட்டான்பழம் பத்து வேப்பெண்ணெய் வெத்திலை வெடிபதத்தில் இறக்கி மறுசட்டி தண்ணீரை வைத்து தூளைப் போடவும் இறக்கவும் - காசிடை திண்டு தலைக்கும் பொருத்தி மூணு நாளின்பின் எண்ணெய் களற்றவும். –அஞ்சு மாதம் ஒன்பது மாதம் ஏழு மாதம் இப்படித் தின்று முழுகவும். ஒரு வியாதியும் வராது.

**சின்ன நாயளன் விதி எண்ணெய்**

அதிமதுரம் களஞ்சி 5 எண்ணெய் 5 படி கயில் கருப்பன் சாறு 10 கயில பசுப்பால் 16 படி கயில எலிமிச்சம்புளி 4 படி கயில மெழுகு பதம் காய்ச்சி வடித்து தலையில் தேய்த்து முழுகவும். பித்தம் 18 சிலேட்டுமம் கண்பூ கபாலக்குத்து காய்ச்சல் காசம் படலம் இவை எல்லாம் தீரும்.

**ஙரு- 35 வேறு**

**மண்டை சூலை பீனிசத்துக்கு எண்ணெய்**

சாரணை வேர் ஏலம் இலவங்கம் கச்சோலம் சுக்கு கருஞ்சீரகம் இந்துப்பு துருசு தேவதாரம் வசம்பு களஞ்சி 1 வெள்ளாடடுப்பாலிலரைத்து கரைத்து நல்லெண்ணெய் அளவுக்கு சரக்கும் விட்டு மூன்று நாள் கசாயமிட்டு காய்ச்சவும். முறிபதத்தில் வடித்து பொருத்தவும். உப்பு புளி தவிர்க்கவும்.

Copyright @ 2022 Eastern University Sri Lanka

**பிள்ளை பெற்ற பெண்கள் வயிற்றுவலிக்கு**

இரு சீரகம் வெந்தயம் அசமதாகம் சுக்கு மிளகு திப்பிலி கடுகு ஓரொண்டு களஞ்சி 6 வறுத்து உள்ளி நாலு களஞ்சி வெதுப்பி பொடி செய்து நல்லெண்ணெய் ஒரு சிறங்கை காயவைத்து கருப்புக்குக்கட்டி கூடவிட்டு குளம்பாக்கி புன்னைக்காய் அளவு தின்ன வயிற்று வலி மாறும். இது உண்மை.

**வேறு**

திரிகடுகு காக்கணம் பருப்பு பெருங்காயம் வெள்ளுள்ளி இந்துப்பு இருசீரகம் கொடிவேலி வேர் ஓரொன்று களஞ்சி 2 நேர்வாளம் காந்தம சாதி லிங்கம் ஓரொன்று களஞ்சி 1 வெதுப்பி பொடி பன்னி வெருகடி தேனில் கொள்ளவும் குடகிரி வாய்வு சூதக வாய்வு வயிற்றில் சலவலிப்பு பொருமல் நாபியைச் சுற்றி வலிக்கிறது இடப்பிர வாய்வு வலி இதுவெல்லாம் தீரும்.

**வேறு மண்டைத் தலை பீனிசத்திற்கு எண்ணெய்**

சாறணை ஏர் வேர் இலவங்கம் கச்சோலம் சுக்கு கருஞ்சீரகம் இத்துப்பு துருசு தேவதாரம் வசம்பு ஓரொண்டு களஞ்சி 1 வெள்ளாட்டுப்பாலில் அரைத்து கரைத்து நல்லெண்ணெய் அளவுக்கு சரக்கும்விட்டு காசாளமிட்டு மூன்று நாள் காய்ச்சி முறிபதத்தில் வடித்து பொருத்தவும்.

**ஙசா 36 தூதுவளை நெய் -இருமல் காய்ச்சலுக்கு**

தூதுவளை இலை காய் அல்லது பழம் ஒரு பிடி இலையளவுக்கு துவைத்து ஆவின்நெய் அரைக்கொத்து சீனிபிடி வேப்பம் பட்டை ஊறல் சிறங்கை திப்பிலி அக்கிறா கோட்டம் ஏலம் நெல்லிக்காய் சித்தரத்தை தூதுவளை வேர்முத்தக் காய்ச்சு இவை அரைக்களஞ்சி தூளாக்கிபோட்டு ஈரவெங்காயம் பொரிஞ்சபதத்தில் இறக்கி சாப்பிடவும். கை கண்டது பத்தியம் பிடிக்கவும்.

**வேறு – கிறந்தி எண்ணெய்**

வேப்பெண்ணெய் அரைக்கொத்து ஈர உள்ளி அரைக்கொத்து நாறாக்கிரந்தைப்பூ பூண்டு கொவ்வை இலை பிள்ளைக் கொல்லி இவை ஒவ்வொரு பிடி துவைத்து எண்ணெய்யில் விட்டு மூனுநாளைக்கு பிடமிட்டு அல்லது கொதுப்பித்துக் கொள்ளவும். வறுத்து உப்பக் கூட்டவும் இனிப்பு கசப்பு கிரந்தி இல்லாத கறி கூட்டவும்.

Copyright @ 2022 Eastern University Sri Lanka

**வேறு புளி எண்ணெய்**

விழாவரிசி அரத்தை சதகுப்பை அகில் தேவதாரம் மரமஞ்சல் வெட்பாலரிசி செவ்வியம் சிறு மூலம் செண்பகப்பூ நாகம்பூ கடுக்காய் நெல்லிக்காய் கொத்தமல்லி கோட்டம் செஞ்சந்தனம் எலுமிச்சம் புளி கொத்து 6 நொச்சிச்சாறு கொத்து 6 மோர் கொத்து 6 நல்லெண்ணெய் கொத்து –க- செங்கத்தாரி மயில் ஆடிக்கொத்து பெருமருந்து கள்ளபனை வில்லபத்திரிசாய வேர் கொடி வேலி வேர் சரக்கு களஞ்சு –அ- நார் முறி பதத்தில் இறக்கி வடித்து தலையில் தப்பி முழுக கபாலம் ஏப்பிளப்பு கிறந்தி செங்கமாரி சிலேட்டுமம் இவை தீரும்.

**ஙள 37 சன்னிவாத சுரத்துக்கு எண்ணெய்**

காக்கணம் கொவ்வை நொச்சி பேய்ப்பருத்திச் சமூலம் வேலிப்பருத்தி வாதமடக்கி இவை சாறு –ரு- ஒவ்வொன்றும் கயில சாகம் சுரத்தை தேவதாரம். செவ்வியம். சிறுமூலம் இத்துப்பு திப்பிலி அயமதாகம் வெட்பாலரிசி வசம்பு வேர்க்கொம்பு வெளுத்தல் பிசின் வாலுவை மரமஞ்சள் கருஞ்சீரகம் ஓரொண்டு களஞ்சி 2 சிவனார் வேம்பு நிலக் குமுள் சீதேவியார் செங்கழுநீர் பெருமருந்து கண்டங்கத்திரி சிவதைவேர் ஓரொண்டு களஞ்சி 2 வேப்பெண்ணெய் நல்லெண்ணெய் ஆமணக்கெண்ணெய் அரைத்துக்கரைத்து மூன்று நாள் ஊறவிட்டு காய்ச்சி சரியான பதத்தில் வடித்து தலையிலும் பொருத்தி உள்ளுக்கும் திண்டு நய்யமிடவும்.

**வேறு**

சீளப்பா பலம் -ங- கராம்பு ஏலம் இலவங்கம் சாதிக்காய் சதகுப்பை சிறுதிப்பிலி திப்பிலி மூலம் மிளகு சுக்கு குறோசாணி பொரிகாரம் கோட்டம் வெளுத்தல் பிசின் அசமதாகம் அதிவிடயம் கடுகுறோசனை இவை ஓரொன்று களஞ்சு –க- பொரிகாரம் ஓமம் வெளுத்தல் பிசின் பொரித்துக் கொள்ளவும். பத்தியம். கோழி முட்டை சாம்பல் வாழைக்காய் உப்பு புளி தவிர்க்கவும். ஒன்று விட்டு ஒருநாள் முழுகவும். கிரந்தி பறங்கிக்கால் முடக்கம் தீரும். (ஆனைக்கால்)

**ஒருவிதை இழுத்த பள வாசுவுக்கு**

வெந்தயம் களஞ்சு –க- நற்சீரகம் களஞ்சி –க- கருஞ்சீரகம் களஞ்சி –க-கடுக்காய் களஞ்சி ரு உள்ளி களஞ்சு –க- மிளகு பழம் -ரு- இவை தூள் இடித்து மூன்றாகப் பிரித்து –ங- 3 நேரம் முருங்கைப்பூச்சாற்றில் தின்னவும். மூன்று நாளைக்கு உப்பு புளி தவிர்க்கவும்.

Copyright @ 2022 Eastern University Sri Lanka

**வேறு**

**சிறு பிள்ளை மாந்தத்திற்கு**

பொடு தலை வேர் உள்ளி அயமதாகம் திப்பிலி ஓரளவு கீலையில் கட்டி தண்ணீல் விட்டவித்து அரைத்து உருண்டை உருட்டி நிழலில் உலர்த்தி 3 நேரம் இளவெந்நீரில் பருக்கவும். சிறுபிள்ளை சத்தி நிற்கும்.

**ஞஅ 38 வெட்டு மாறன் குளிகை**

சாதிக்காய் கராம்பு வசிவாசி காந்தம் குருசாணி ஓமம் அவின் சாதி லிங்கம் மதுமத்தம் விதை அதிவிடையம் இலவங்கம் கைய்ப்பு அரப்பொடி சத குப்பை இவை களஞ்சி-க-1 கஞ்சாச்சாறு விட்டரைத்து மறுபடி தூளாய் அரைத்து பேன் பிடி திண்டு வர வாதம் பிரமியம் சலக்களிச்சல் (சீனி வருத்தம்) வயிற்றுவலி மூல வியாதி இவை தீரும்.

**வேறு**

**சேரங் கொட்டை பற்பம்**

செயங் கொட்டை ருய (50) இதரங் களஞ்சி-உ-(2) குறோசாணி களஞ்சி உ (2) அக்கிறா களஞ்சி-உ-(2) திப்பிலி மூலம் களஞ்சி -உ- (2) பழப்புளி தோல் பாக்களவு செயங் கொட்டை முகிள் சீவி வைத்து ஒரு மட்டான வேளை இதரம் விடவும் பிறகு சரக்குதூள் தூவி இடிக்கவும். பசை பற்றிப் பிடிக்கிற வேளை களச்சி கொட்டை அளவு உருண்டை பிடிக்கவும் இரண்டு நேரமும் தின்னவும். விடிய ஆறு மணிக்குத் தின்றால் அ. (8) மணிக்கு முழுகவும்.

முழுகி மோரும் சோறும் தின்னவும். மோரில்லாமல் மருந்து தின்ன வேண்டாம். வாயில் கட்டும் வழுதிலங்காய் பசு நெய்யில் பொரிச்சு தின்னவும். நீற்றுப் பூசணிக்காய் பன்றி இறைச்சி ஆகாது. படுக்கை –(உடலுறவு) ருய (50) நாள் விலக்கவும். - தீரும் வியாதி- அல்லைப்பூக் கரப்பன் வாதக் கரப்பன் புடைக்கரப்பன் காயன் கரப்பன் பறங்கி பெரும் பறங்கி (தொழு நோய்) சொறி கரப்பன் பறங்கி வியாதி (குட்டை ரோகம்) அரை வியாதி அரையாப்பு அழகுண்ணி சொறி சிரங்கு கெற்ப வாய்வு கைகால் பிடிப்பு குத்து உளைவு எல்லாம் தீரும். உப்பு புளி கூட்டலாம் கிரந்தியானதெல்லாம் தின்னலாம். வாயிற்றாக்கினால் ஆலம்பட்டை பிரசம் பட்டை பருத்திப் பஞ்சு ஊறல் போட்டு கொப்பளிக்கவும். நோவும் அசைவும் கண்டால் பசுப்பால் கூட்டவும்.

Copyright @ 2022 Eastern University Sri Lanka

**ஞச -39. அட்ட சூறணம்**

இரு சீரகம் உள்ளி மிளகு கடுகு இந்துப்பு பெருங்காயம் அசமதாகம் ஓரொண்டு களஞ்சி தூள் செய்து ஙு (3) முறை பிடமிட்டு இடித்து வெருகடிப் பிரமாணம் இரண்டு நேரமும் தேனில் குளைத்து தின்னவும் குணமாகும்.

**வாதப் பிடிப்புக்கு**

சீனப்பாகு தூள் இரண்டு விராகனிடை 4 கொத்து பசுப்பால் விட்டவித்து நாலில் ஒரு பங்கு ஆனால் அதை 9 நேரம் குடிக்கவும். அந்தந்த வேளைக்கு அவித்துக் குடிக்கவும். பசுப்பால் கோழிக்குஞ்சு சுறாக்கருவாடு திருக்கைக்கருவாடு கூட்டவும். உப்பு புளிப்பு விடவும்.

**இரத்தப் பிரமயத்திற்கு**

மிளகு களஞ்சி இரண்டு சுக்கு களஞ்சி 4 நறுந்தாளிச்சாறு விட்டரைத்து நல்லெண்ணெய் விட்டு குளைத்து குளிசையாக திரட்டி அந்தி விடிந்து 2 உருண்டை விழுங்கவும். நல்லது 5 நாள் பத்தியம் பிடிக்கவும் கை கண்டது.

**வேறு**

ஓமம் சீரகம் அதிவிடையம் சாதிக்காய் இவை ஓரொண்டு களஞ்சு – க-01 உள்ளி பலம் -க- 1 கொத்துப் பாகாக்கி அரைத்து தின்னவும். -எ- நேரம் 7 வெய்ய தண்ணீர் பரிமாறவும்.

**சுங 40. உட்டண வாசுவுக்கு**

மிளகு வசம்பு சுக்கு. திப்பிலி செருப்படி வேர் ஓரொண்று ரு -5- பலம் தூள் செய்து தேன் அல்லது கற்கண்டில் புகட்டி சமைய மட்டும் தின்னவும். பத்தியம் பிடிக்கவும்.

**வேறு எரி குன்மத்துக்கு**

சாறணை சிவதை சமூலம் நசித்திடித்து இருநாளி நீர்விட்டு வத்தக் காய்ச்சி விளக்கெண்ணெய் இருநாளி விட்டு இந்துப்பு களஞ்சி 4 காயம் களஞ்சி –க- உள்ளி கடுக்காய் (உய 20) வெண்காயம் களஞ்சி உ -2- சுக்கு சிறங்கை மிளகு சிறங்கை திப்பிலி களஞ்சி –உ- காசிலன்னம் -களஞ்சு- உ- நேர்வாளம் களஞ்சி –உ- அரைத்து கரைத்து காய்ச்சி பதத்தில் வடித்துத் தின்னவும் மூல வாய்வு குடல் வாதம் மந்த பீலிகை பிளித்தேப்பம் செரியாமை சத்தி உதிரத்தில் வியாதி எல்லாம் தீரும்.

Copyright @ 2022 Eastern University Sri Lanka

**பல வியாதிக்கும் பற்பம்**

சீனப்பாக் களஞ்சு 6 கராம்பு களஞ்சு 6 சாதிக்காய் களஞ்சி அ-8 குறோசாணி களஞ்சு –க-1 மிளகு களஞ்சு 6 சாதிபத்திரி களஞ்சு 3 கோட்டம் களஞ்சு 3 நத்தைச்சூரி வேர் களஞ்சு 4 சீர்தில்வேர் களஞ்சு 3 சுக்கு களஞ்சி 5 சிறுகுறிஞ்சா வேர் களஞ்சி 3 வெயிலில் உலர்த்தி பொடி செய்து வறனியல் அடைத்து வைத்துக் கொண்டு வெருகடிப்பிரமாணம் திண்டு வென்னீர் கொள்ளவும். இருபது நாளைக்குத் தின்னவும் வாதக் கரப்பன் திமிர்வாதம் மண்டை சூலை மகா சன்னி வாதம் பிரமியம் உய 20ம் சிரங்கு குட்டம் படர் தாமரை பீனிசம் காது கூப்படுதல் (குய்யோடல்) தல மண்டை வியாதி 9, 17 வகையிலான பறங்கிநோய் ஒடு விழுந்த புண் ஒடுப்பரப்பு மூலவியாதி 9 வகை பிளவை கண்டமாலை துடைப்புண் கடி கை அரையாப்பு உபத்திரம் இவை தீரும். 24 நாளைக்கொருக்கால் எண்ணெய் போட்டு வென்னீர் முழுகவும். கறி ஆடு மாடு பன்றி மான் மரை கூட்டலாம். காய் கறி ஆகாது. தலை முழுகின மற்றநாள் மருந்து தின்னவும். மறுபடியும் பத்தியம் பிடிக்கிறது. உப்பு புளி கொறுக்காய் கூட்டலாம். ஆண் பெண் வாடை ஆகாது.

**சுக 41 வேறு**

**மாதவிடாய் வராவிட்டால்**

திருநீற்றுப் பச்சை துத்தி வேர் கூடவிட்டு அவித்துக்குடிக்க உடைக்கும். மறிக்க- குதிரைச்சாணி மாட்டுச்சாணி ஆட்டுச்சாணி காய விட்டு வெந்நீரில் ஊறவிட்டு வடித்துக் குடிக்கவும்.

**கோளைக்கு காய்ச்சலுக்கு நெய்**

இரு சீரகம் கொத்தமல்லி திரி கடுகு வசம்பு உள்ளி ஓமம் அதிமதுரம் இந்துப்பு ஆடாதோடைச்சாகம் இசங்கு தூதுவளைச்சாகம் தேன் ஆவின் நெய் கூட்டிப் பாகுகாய்ச்சி குடிக்கவும். உப்பு புளி தவிர்க்கவும்.

**வேறு**

**மரித்த பிள்ளை விழ மருந்து**

1.சாறணைவேர் உள்ளி வசம்பு கடுகும் அரைத்து சுடுதண்ணீரில் கொடுக்கவும்.

2.கீழ் காய் நெல்லி வேர் வட்டு வேரும் அரைத்து ஆமணக்கெண்ணெய்யில் குடிக்கவும்.

Copyright @ 2022 Eastern University Sri Lanka

3.குண்டுமணி வேர் (வடக்கே போன வேர்) முலைப்பாலில் அரைத்து தலையில் மத்திக்கவும் (தப்பவும்) திலதமிடவும் கீழ்நோக்கி இழுத்து விடவும்.

**வேறு- மா விழ**

இசங்கம் வேர் அரைத்து காசளவு வெந்நீரில் கொடுக்கவும். மா விழும்.

**சுஉ 42 சவுக்கார எண்ணெய்**

சவுக்காரம் நவச்சாரம் இந்துப்பு பெருங்காயம் இருபலம் பழுத்த தேங்காய்ப்பூ வண்டு கட்டி அவித்து புளிந்து அதில் அரைத்துக் காய்ச்சி பதத்தில் வடித்து ஒரு காசிடை தின்ன கெற்ப வாயு தீரும்.

**வேறு**

**சன்னி வாத சுரத்துக்கு எண்ணெய்**

சீதேவியார் செங்கழுநீர் வேர் குப்பை மேனிவேர் வெளுத்தல் பிசின் உள்ளி வசம்பு கூட்டி அரைத்து நல்லெண்ணெய்யில் கரைத்து காய்ச்சி பதத்தில் வடித்து தலையில் தேய்த்து மறுநாள் தலைமுழுகி எண்ணெய் களற்றவும் சன்னிவாத சுரம் மாறும்.

**வேறு காய்ச்சலுக்கு**

செண்பகப்பூ அதிமதுரம் ஏலஞ்சி நன்னாரி வேர் சீரகம் சந்தனம் இவை முலைப்பாலில் அரைத்துக் கொடுக்க காய்ச்சல் விடும்.

**வேறு - இரத்தக் கடுப்புக்கு களிச்சலுக்கு**

நற்சீரகம் மணலில் முள்ளியும் நறுவிலிப்பட்டை சாறு பிளிந்து அதில் அரைத்து சுண்டைக்காயளவு உருண்டை செய்து நிழலில் உலர்த்தி எருமைத் தயிரில் ஒரு உருண்டை தின்னவும். இரத்தக் கடுப்பு களிச்சல் மாறும்.

**மூல வியாதிக்கு**

ஈர வெங்காயச் சாறு நாளி பால் நாளி நாயுருவிக் கொழுந்தவித்த தண்ணீர் நாளி நெய் நாளி காய்ச்சி பதத்தில் வடித்துத் தின்ன மூல வியாதி கடுப்பு மாறும்.

**கரப்பனுக்கு**

நீர் வள்ளிக்கிழங்கு குப்புளா இலை சிற புள்ளடி காட்டு மல்லிகை இலை முடுக்கிளை சிறு காஞ்சோன்றி இலை சித்தவரை இலை பருத்தி இலை துவைத்து சாறு பிளிந்து திப்பிலி சீரகம் கூட்டி

Copyright @ 2022 Eastern University Sri Lanka

அரைத்து நல்லெண்ணெய்யில் காய்ச்சி வடித்து தின்னவும். கரப்பனிவை எல்லாம் தீரும்.

**சரு 43 வாதக் கரப்பனுக்கு எண்ணெய்**

நொச்சி வேர் வாத மடக்கி வேர் சாறணை வேர் ஓரொன்று ஒருபலம். குறுக நறுக்கி இடித்து 2 மரக்கால் தண்ணிர் விட்டு உரியாகக் காய்ச்சி நல்லெண்ணெய் உளக்கு நெய் உளக்கு இலுப்பெண்ணெய் இவை விட்டு ஒக்க உளாவி அதில் கரைக்கும் மருந்து நற்சீரகம் மிளகு திப்பிலி உள்ளி வசம்பு கடுகுறோசாணி இந்துப்பு சுக்கு அதிவிடயம் ஒரொண்டு களஞ்சு அரைத்து எண்ணெய்யில் கரைத்து மூணு நாள் கசாளமிட்டு நாலாம் நாள் காய்ச்சி வடித்து காசளவு எண்ணெய் தின்னவும். வாதக்கரப்பன் விழுந்த இடத்தில் புண்ணும் மாறும். (படுக்கைப் புண்).

**வேறு**

**மாந்தத்திற்கு –ஆமை ஓட்டுக்குளிகை**

ஆமணக்கெண்ணெய் கிறங்கை நாலு சாதிக்காய் திப்பிலி அசமதாகம் இலவங்கம் இவை ஓரொண்டு களஞ்சி 2 ஈர வெங்காயம் சிறங்கை பாலாமை ஒடு களஞ்சி 4 நேர்வாளம் 25 அவுரி வேர் உத்தமாகாளிவேர் தயிர்வேளை வேர் நாய்க்கடுகு வேர் ஓரொன்று களஞ்சி 4 அரைத்துக் காய்ச்சி தலையிலும் வைத்து உள்ளுக்கு க -1 நேரம் இரண்டு நேரம் மூன்று நேரம் கண்டு கண்டு கொடுக்கவும். யசு 18 மாந்தமும் தூக்கமும் தீரும். கை கண்டது.

**சுச 44 வேறு**

**ஏலாதிக் குளிகை**

ஏலம் இலவங்கம் இருவேலி நன்னாரி இலாமிச்சை வேருடனே முத்தக் காச்சு நெல்லிக்காய் உத்திராட்சம் அதிமதுரம் கோட்டம் சந்தனம் கல்னார் செங்கழுநீர்க்கிழங்கு உலர்ந்த முந்திரிகை (கொடிமுந்திரி) செண்பகப்பூ நெற்பொரி பச்சைக்கற்பூரம் பூதவிருட்சம் வில்வவேர் இலுப்பைப் பூ அதிவிடயம் முதிர்ந்த கலையின் கொம்புடனே (மான் கொம்பு) நற்சீரகம் இவையெல்லாம் ஒரே சமன் இடைவாங்கும் மதாளம்பழச்சாறு செவ்விளநீர் கருப்பங்சாறு வார்த்தரைத்து சீனக்கடலை பிருமாணம் (பட்டானிக்கடலை அளவு) சிறுக உருட்டி நிழலில் உலர்த்தி இளநீரில் குடிக்கப் பிணி தீரும். உடலைத் தாக்கும் ரோகம் தொண்ணூறும் தலையில் சுரமுடனே பிரமேகம் சூலை அணைய கொடிய அத்தி சுரம் நெருப்புக்காய்ச்சல் நிட்டூரம் செய்யும் பித்த சன்னி நெருப்போடனைய எலும்புருக்கி ஏலமனைய வயிற்றுளத்தி இவை தான் தீரும் காண்பாய்.

Copyright @ 2022 Eastern University Sri Lanka

**வேறு**

**ஏலாதி சூறணம்**

ஏலம் கோட்டம் இலவங்கம் இலங்கும்பத்திரி (வில்பத்திரி) சிறி கடுகு கோல் முத்தம் கொத்தமல்லி குலுவும் கருஞ்சீரகம் நாகம்பூ சந்தனம் கற்பூரம் மயங்கும் கராம்பு தாளிகையும் சாலச் சமனாய் மருந்து கொண்டு (தரங்குன்றாத இப்பொருட்களை சரிசமனிடை எடுக்கவும்). மீண்டும் சரிபார்த்து சரக்கை கூட்டேன். இவற்றை இடித்தவித்து பக்குவப்படுத்திக் கொண்டு வெகு கடி தேனில் உண்ணவும். உடல் எரிவு கால் எரிவு நாட்டம் மிகுந்த உவார்த்தி குன்மம் நல்கும் விக்கல் இரத்த பித்தம் இட்டமிகுந்த இளைப்பிருமல் இருகண் சுளத்தி தலைக்கனப்பு வாட்டமுறவே ஓட்டிவிக்கும் விளா ஏலாதி சூறணமே.

45- **சரு வேறு -சுரக்குளிகை**

முக்களஞ்சு சுக்கு நேர்வாளம் முக்களஞ்சு கடுக்காய் திப்பிலி களஞ்சு க (1) இவையெல்லாம் எடுத்து நொச்சி இலைச்சாறுவிட்டவித்து மஞ்சாடிப் பிரமாணம் உருண்டைப் பண்ணி நிழலுலர்த்தி கருப்புக்கட்டியாகுதல் நொச்சி இலைச்சாறாதல் பிரட்டி(தோய்த்து) தின்னவும். விரோதிக்கும்- (கைகண்டது) பத்தியம் மிளகு நீரும் சோறும் தின்னவும்.

**வேறு**

இருசீரகம் அதிமதுரம் கோட்டம் ஏலம் இலவங்கம் சந்தனம் இருவேலி இலாமிச்சை நன்னாரி வேர் அமுக்கிறா வேர் முத்தக்காசிக் கிழங்கு ஓரிதழ் தாமரை நல்லெண்ணெய் கொத்து -ரு- 5 பசுப்பால் கொத்து ரு- 5 இளநீர் கொத்து ரு- 5 காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து தலையில் வைக்கவும்.

**அக்கரத்துக்கு எண்ணெய்**

தூதுவளை இலை குன்றுமணி இலை கொவ்வை இலை குறிஞ்சா இலை மொசு மொசுக்கை இலை ஓரொன்றும் சாறு கொத்து 5 நறனை கொத்து 5 (பசுநெய்) குட்டான் பனங்கட்டி 1 இவைகூட்டி மெழுகுபதத்தில் காய்ச்சி வடித்து உள்ளுக்கு நெய்யும் தலைக்கெண்ணையும் ஒண்டுக்கொன்று பிசகாமல் செய்யவும். பிசகினால் கனகாட்டுப்படுத்தும் (துன்பப்படுத்தும்)

Copyright @ 2022 Eastern University Sri Lanka

**அக்கரத்தூறல்**

அத்திப்பட்டை நாவல் பட்டை துளிர் கரையாக்கன் பட்டை துளிர் பேர் அகத்திப்பட்டை நீர்ப்பூலா வேர் பொன்னவரைம்பட்டை அல்லி இலந்தம்பட்டை வல்லாரல் பொடுதலை கற்பூரவள்ளி ஓரொன்றும் ஒரு பிடி ஈரவெங்காயம் அக்கிறா மாசாக்காய் ஓரொன்றுக் களஞ்சி -க- எட்டொன்றாய்க் காய்ச்சி கொடுக்கவும். அக்கறம் கண்ட பிள்ளை குணமாகும்.

**46 – சரு அக்கினி மாந்தத்திற்கு**

பொன்னவரை இலை பட்டை இலந்தை பட்டை துளிர் சித்தகத்தி பட்டை வல்லாரல் கரையாக்கன் பட்டை பூ அயமதாகம் ஈரவெங்காயம் மாசாக்காய் சரியாக காய்ச்சவும். இந்த ஊறல் அக்கினி மாந்தம் வயிற்றுப்போக்கு நிற்கும்.

**அக்கினி மாந்தத்திற்கு**

மாம்பட்டை முள்ளிலவம்பட்டை (முருக்கு) அத்திப்பட்டை வேர்க்கொம்பு இவற்றைத் தட்டி நசித்துப்போட்டு தண்ணீர் விட்டு இரண்டொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்கவும். அக்கினி மாந்தம் வகுத்துப் பொருமல் வகுத்துப் போக்கு நிற்கும்.

**வேறு மாந்தத்திற்கு ஊறல்**

இருசீரகம் அசமதாகம் கடுக்காய் கராம்பு நேர்வாளம் 10 மிளகு களஞ்சி -உ-(2) இவை கணலிட்டு ஓடிட்டு (ஓடு வைத்து வறுத்து) பொடி பண்ணி காக்கனம் வேர் களஞ்சி -உ- வல்லாரல் பிரமி பொடுதலை பொன்னாவரை இலை கற்பூரவள்ளி இலை இவை ஒருபிடி இலை. நீர் வற்ற வறுத்து சரக்கும் இலையும் பொட்டனி கட்டிப்போட்டு நாலுபடித் தண்ணீர் விட்டுப்போட்டு 4. நாலொன்றாகக் காய்ச்சி எ 7 நேரம் ஐந்து நேரம் கொடுக்கவும். பொரி மாந்தம் அக்கினி மாந்தம் வயிற்றுப்பொருமல் இளைப்பு முட்டுத் தொய்வு இவை மாறும்.

**சிறு பிள்ளை தடுமலுக்கு**

சாம்புராணி மஞ்சள் கருஞ்சீரகம் ஒரு மாசசுண்ணாம்பு நீரில் அரைத்து கொதுப்பித்து உச்சியில் போட சிறு பிள்ளை தடுமல் முறியும். அரக்கினும் காய்ச்சிப் போடலாம். (அரையாப்பு)

**சுள 47 பிள்ளைகள் சுரம் களிச்சலுக்கு**

ஆடாதோடை இலை ஒருபிடி பிடுங்கி வெந்நீரில் அவித்து சாறு கொண்டு தேன் 2, 3 துள்ளி விட்டு களியில் கராம்புரெண்டு அரத்தை இரண்டு கூட்டிக் கொடுக்கவும்.

Copyright @ 2022 Eastern University Sri Lanka

**அக்கரக் குளம்பு**

சாதிலிங்கம் திப்பிலி கருஞ்சீரகம் சுக்கு கடுக்காய் மிளகு அசமதாகம் நேர்வாளம் சரிகண்டு தேனிலரைத்து குளம்பு பதமாக எடுத்து வைத்துக்கொண்டு பிள்ளைக்கு தக்கது கண்டு கண்டு கொடுக்கவும். அக்கரப்பொருமல் சிலேட்டுமகட்டு சூடும் தீரும். தேங்காய்ப்பால் மாற்று.

**வேறு**

**வயிற்றுக்குத்து சூறணம்**

நொச்சிப்பொடி நொச்சித்துளிர் பிரண்டைத் துளிர் வேப்பந்துளிர் சாதிக்காய் கராம்பு வசுவாசு இருசீரகம் திப்பிலி அசமதாகம் பெருங்காயம் உள்ளி மிளகு கராம்பு வேர்க்கொம்பு கடுகு உலுவா சரக்கும் துளிரும் ஒரு அளவாக எடுத்து வெயிலில் பிடத்திலிட்டு இடித்து வடிகட்டி வெருகடிப்பிரமாணம் தின்னவும். பத்தியம் கைப்பு புளிப்பு தவிர்க்கவும். தீரும் வியாதி வயிற்றுக் குத்து செருமுதல் அடைச்சல் தீரும்.

**மாந்தச் சுரத்தூறல்**

இருசீரகம் திப்பிலி அதிமதுரம் கொத்தமல்லி மாசிக்காய் ஈரஉள்ளி கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் களிப்பாக்கு நாவல்பட்டை அத்திப்பட்டை கரையாக்கன்பட்டை அவை சரக்கும் வேரும் ஓரளவு எடுத்துக் காய்ச்சி எட்டொன்றாக்கி கொடுக்கவும்.

**சுஅ 48 முச்சுரத்திற்கு**

கஞ்சாஇலை அவித்து அரைத்து முளகளவு உருண்டை செய்து நிழலுலர்த்தி மூனு சுரத்துக்கும் வெந்நீரில் கொடுக்கவும் மாறும்.

**வேறு**

திப்பிலி கராம்பு குறோசாணி அயமதாகம் நாயுருவி கடுகு பெருங்காயம் இரண்டும் சரி மற்ற மருந்தெல்லாம் ஓரளவு பொடி பண்ணி வைத்துக்கொண்டு காய்ச்சல் கிளம்பும் போது ஒருபேன்பிடி தின்னவும் தண்ணீர் குடியாமல் இருக்கவும். இப்படி மூன்றுநாள் தின்னவும்.

**வேறு**

கோரைக்கிழங்கு மிளகு திப்பிலி கடுக்காய் வேர்க்கொம்பு கோரோசணை உயர்ந்த நற்சீரகம் ஏலமுடன் இருவேலி மதுரம் தற்கோலம் தண்ணீர் விட்டு அரைத்து தேனில் கொடுக்கவும்.

Copyright @ 2022 Eastern University Sri Lanka

**இத்துடன் ஒரு ஏடு முடிகிறது.**

**எழுதியவர். மூத்ததத்தம்பி காத்தமுத்து**

**கொக்கடிச்சோலை**

1676. **தை**. 27 **எழுதிமுடித்தது**.

**மூலப்பிரதி. வைகாளி சின்னத்தம்பி- காலிங்காக்குடி**

1518 **ம் ஆண்டு எழுதியது புதூரில் இருந்து**.

Copyright @ 2022 Eastern University Sri Lanka